ஓம்:

தத் சத்.

திருச்சிற்றம்பலம்.

அறிவானந்த ஐக்யானுபவ

# சிந்தனை விளக்கம்.

திருத்துருத்தி இந்திரபீடம்

கரபாத்திர சுவாமிகள் ஆதீனம்

ஸ்ரீமான்

தண்டறை சுப்பராய ஆச்சாரிய சுவாமிகள்

மாணாக்கர்களில் ஒருவரும்

மதுரை, ஸ்ரீ மீனாம்பிகை பிரஸ் மானேஜருமாகிய

எஸ். கந்தசாமி பிள்ளையவர்கள்

இயற்றியது.

மதுரைத் தமிழ் வித்வான்

ஸ்ரீ-நா. கிருஷ்ணசாமி நாயுடவர்களால்

திருத்தம் பெற்று,

மதுரை, ஸ்ரீ மீனாம்பிகைப் பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

1939.

ACL-FTS 00166

## சற்குரு பெருமை.

---

### வெண்பா.

விழிப்பி லறிவும் விழிப்பொழிவி லின்பம்
அழித்திரண்டு மைக்யமக மாகும்—பொழிப்பான
சாம மறைமுடிவின் தத்வமசி லட்சியத்தின்
சேம மனைத்துயிர்க்குந் தீர்ப்பு.

இவ்வுடலம் நீங்குமட்டும் இவ்விதம்நீ சிந்தனைசெய்
பவ்வியமாம் விதேகமுத்தி பாரினிலே—திவ்ய
அழிவிலா வானந்த மாகவாழ் வாயென்றார்
வழியறிந்த சற்குருதான் வந்து.

### தாய் தந்தையர் பெருமை.

* கந்தமென வேதி கலைந்துலகைக் காட்டுமெனைக்
கந்தசா மியென்றே கண்டழைத்தார்—முந்தியவென்
தாய்தந்தை யாமிருவர் சந்தேக மில்லாமல்
வாய்மையுளா ராஞர் மதித்து.

---

* கந்தம்—அணுத்திரள்.

ஓம்:
தத் சத்.
திருச்சிற்றம்பலம்.

அறிவானந்த ஐக்யானுபவ

# சிந்தனு விளக்கம்.

திருத்துருத்தி இந்திரபீடம்
கரபாத்திர சுவாமிகள் ஆதீனம்
ஸ்ரீமான்
தண்டறை சுப்பராய ஆச்சாரிய சுவாமிகள்
மாணாக்கர்களில் ஒருவரும்
மதுரை, ஸ்ரீ மீனும்பிகை பிரஸ் மானேஜருமாகிய
எஸ். கந்தசாமி பிள்ளையவர்கள்
இயற்றியது.

மதுரைத் தமிழ் வித்வான்
ஸ்ரீ-நா. கிருஷ்ணசாமி நாயுடவர்களால்
திருத்தம் பெற்று,
மதுரை, ஸ்ரீ மீனும்பிகைப் பிரஸில்
பதிப்பிக்கப் பெற்றது.

1939.

## அறிவானந்த நெஞ்சறி வுறுத்தல்.

---

சொரூப நிட்டை—அக நிருவிகற்பம்.

அழிவி லாதினிமை கருதி யொவ்வொருயி
ரடைய வேண்டுதலை நாடியே
ஒழிவி லாதமன மதிச மாதியதில்
உறைய வைத்து மறி வாளர்கள்
வழிய றிந்துவெளி யுருவடைந் துமுள
மதுதெ ளிந்துசுக முணருவார்
மொழிய வேதுமிலை யாவு மெப்பொ ழுது
முழுது மோனநிலை நெஞ்சமே.

சகச நிட்டை—புறநிருவிகற்பம்.

வேறு.

சொல்லாப் பொருளுஞ் சொல்லும் பொருளும்
சொந்தப் பொருளு மிலை
கல்லாப் பொருளுங் கற்கும் பொருளும்
கல்விப் பொருளு மிலை
பொல்லாப் பொருளும் புகழும் பொருளும்
புன்மைப் பொருளு மிலை
எல்லாம் பிரமம் எங்கும் பிரமம்
என்றும் பிரம மயம்.

முற்றிற்று.

ஓம்:
பரப்ரம்மணே நம:



| மதுரை, எஸ். கந்தசாமி பிள்ளை, | தண்டறை, ஸ்ரீமத் சுப்பராய ஆச்சாரிய சுவாமிகள் |
|---|---|

வெண்பா.

இன்னுருவா மென்னறிவை இச்சனனத் தேயுணர
என்னபுண்ணி யஞ்செய்தேன் என்குருவே—பின்செனமம்
வாரா வகையில் மறுபிறவி மாய்த்தெனது
தீரா விடும்பையைநீ தீர்.

பிரமகீதை—பிரகதாரணிய உபநிஷத்து.

அவதாரிகை:—இந்த ஆன்ம தரிசனத்தினுலேயே துக்கங்கள் நீங்குமென்று கூறுகின்றார்.

மத்தமு றும்பிற விப்பகை மாளும்
முத்தியு முன்னிலை யாமுடி வில்லா
வெத்துய ருங்கெடு மின்பம தாகு
மத்துவி தத்தைய றிந்தவ ருக்கே.

ஓம் தத் சத்.

# முகவுரை.

“காண்பானும் காண்பனவும் காட்சியும்வா
 தனையுடனே கழலவிட்டுச்
சேண்பாவு காட்சித்த முதலொளியா
 மச்சொரூபஞ் சிந்தை செய்வா
மேண்பாலா முள்ளதில தெனுமிரண்டி
 னிடையெய்தி யிறவி லாதாய்
மாண்பான வொளிக்கெல்லா மொளியாயச்
 சொரூபத்தை மதித்தல் செய்வாம்.”

என்ற, எசுர்வேத சாமவேத வாக்கியத்தின்படி,

உலகமும் உலகத்திலுள்ள சகல சங்கற்பங்களும் பொய் என நேதிகளைந்து ஆங்கே பூரணமாயிருக்கும் பாரமார்த்திய சுத்த சைதன்ய பிரமமே தானென்று பாவித்து அதில் ஐக்யமடைதலே ஜீவபரம ஐக்யம் என்பதுதான் ஆழியகடல் போன்ற வேதாந்த சாஸ்திரங்களில் ஏழேழு தலைமுறையளவும் பாடுபட்டு ஒருவன் பயின்று அளாவித் துளாவிக் கண்டறியும் அற்புத சித்தாந்தமாகும்.

இதனை நீண்டகாலமாக எமது சற்குரு திருத்திருக்கி இந்திரபீடம் சச்சிதானந்தசுவாமிகள் ஆதீனம் தண்டறை ஸ்ரீமான் சுப்பராய ஆச்சாரிய சுவாமி யவர்களிடத்து யாம் கற்றுக்கொண்ட சுருதியாதி சிரவணத்தாலும், பெற்றுக் கொண்ட உபதேசாதி நியமனத்தாலும் யாம் அனுபவித்துக் கண்டறிந்தாங்கு மற்றைய மக்களுக்கும் பயன்படுத்த வேண்டி முதலில் அறிவானந்த நெஞ்சறிவுறுத்தல் என்னும்

பெயரிய ஒருநூலையும், இதுபோது அறிவானந்த ஐக்யானுபவ சிந்தனை விளக்கம் என்ற இந்நூலையும் செய்யுள் வடிவமாக இயற்றி வெளியிட்டிருக்கின்றேம்.

இவற்றை யாம்செய்யுள் வடிவமாகச் செய்தேமாயினும் செய்யுளிலக்கண முறையுணர்ந்த தக்க ஓர் வித்வானிடத்து சீர்திருத்திக்கொள்ள வேண்டுமென்ற ஆசையும் அவ்வாறு செய்வதால் அனுபூதி விஷயங்களுக்கு ஒருவேளை அது முரணைச் சேர்ந்துவிடுமோ என்கிற ஒரு அச்சமும் எமது மனத்தே அடிக்கடி தோன்றுவதுண்டு ஏனெனில் பெரும் பாலும் "வித்வான்களுக்கு வேதாந்தம் கசப்பு; வேதாந் திகளுக்கு *வித்வத்வம் துவர்ப்பு" என்பது சரித்திரத் திலுஞ் சான்று காணத்தக்க சம்பிரதாயம்.

இவ் அச்சம் எம்மைவிட்டு அறவேநீங்குமாறு மதுரைத் தமிழ் வித்வானும் எமது மாபெரும் நேசருமான ஸ்ரீமாந் நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் எமது முன்னூலைத் திருத்தி யளித்த வண்ணமே இந்நூலையும் திருத்தியளித்த பேருதவிக்காக எமது அன்பையே அவருக்கு ஆர்வமோடு திருப்பி யளிக்க யாம் கடமை கொண்டுள்ளேம்.

வெண்பா.

ஏது மறியா திருமாந்து பொய்த்தோற்ற
மீது மயங்கி மெலியுமெமை—ஆதரித்தும்
எந்நா லறியவைத்த எந்தைசுப்ப ராயருக்கே
இந்நா லுரித்தாதும் ஈந்த.

இங்ஙனம்,

எஸ். கந்தசாமி பிள்ளை,

ஸ்ரீ மீனாம்பிகைப் பிரஸ், மதுரை.

---

* வித்வத்வம்—இலக்கணப் பயிற்சி.

ஓம் தத் சத்.

# நூற் சிறப்புப் பாயிரம்.

மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைமை ஆசிரியர்

பிரம்மஸ்ரீ: திருநாராயண ஐயங்கார் சுவாமியவர்கள்

அருளியது.

வெண்பா.

வேதாந்த விற்பன்ன வித்வகந்தசாமிபுகல்
நாதாந்த மிந்நூலை நான் பார்த்தேன்—பூதாந்த
ஆதி உணரலாம் அப்பா லுக் கப்பாலாம்
சோதி உணரலாம் தோய்ந்து.

தேன் றருகந்த சொற்பொலிவும் தேர்ந்த பொருட்பொலிவும்
வான் றகுந்த செய்யுள் வகைப்பொலிவும்—ஆன்ற
உபநிடத மாகடலி னுட்புகுந்தாய்ந் தாங்கே
தபவுணர்வு கண்ட தமிழ்.

ஓம் தத் சத்.

மதுரைத் தமிழ் வித்வானும், அத்வைத ஆராய்ச்சியாளரும்,

மதுரை எக்ஸெல்ஸியர் பவர் பிரஸ் மானேஜருமாகிய

ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் எழுதிய

வெண்பா.

அத்வைத மெங்கே! ஆயுள் நமக்கெங்கே!
எத்தனைநாள் யார்ப்ப திருந்திருந்து?—சத்தாகும்
ஒன்றிது நூல் பார்த்தாலே உண்மை உணர்ந்திடலாம்
அன்றேல் வருமோ அறிவு!

தன்னையறிந் துய்யவழி சாராமல் ஐயையோ!
என்னபுகழ் என்னபிழைப் பீதாகும்?—சொன்னேன்கேள்
எந்நூல் அறிந்திங் கிருந்தாலும் சற்றேநீ
இந்நூல் அறிமனமே இன்று.

காற்றூடி போலுரிய காலமெல்லாம் போகவிட்டுக்
கூற்றூடி வந்தால் குளறுவதேன்?—சாற்றுகநீ
எங்கந்த சாமிபுகல் இச்சிந்த னுவிளக்கம்
இங்கந்த மாதியுமீ இன்று.

எச்சிதா னந்தத்தை ஈங்கறியத் தேடினரோ
அச்சிதா னந்தம் அறிந்ததினால்—சச்சிதா
னந்தமாய் என்ஞான்றும் நானுனேன் இச்சிறிய
இந்தநூல் ஒன்றால் இனிது.

அறிவ தறிந்தாங் கதுவிதுவென் றோடிப்
பிறிதிலதா மோர்நிலையைப் பெற்றேன்—நெறிசிறந்த
மீனும் பிகைப்பிரஸார் வித்வகந்த சாமி நல்லோன்
தானுய் உரைத்ததமிழ் சார்ந்து.

உ

ஓம் தத் சத்.

திருச்சிற்றம்பலம்.

# அறிவானந்த ஐக்யானுபவ

# சிந்தனை விளக்கம்.

## கணபதி துதி.

கற்பனை யுலகைக் காணுமிவ் வறிவைக்
கணபதி யுருவமோங் காரத்
தற்பத நிலையிற் சச்சிதானந்த
சாட்சிமாத் திரமதாய்க் கரைத்தங்
கற்புத மாக விளங்குமென் னுணர்வி
லதீதமா யாழ்ந்துமே பணிந்து
நிற்பனைக் காணு நிலைதவி ராமல்
நிகழக வெளியெலாம் நிறைந்தே. (1)

## சுப்பிரமணியர் துதி.

தோற்றுமிவ் வுலகைச் சொற்பன மென்றே
சுருதிகள் சொல்லிய வழியில்
ஆற்றலோ டென்னை யனுதின மாய்ந்தும்
ஐம்பொறி கரணங்க ளுடனே
சோற்றுரு வான தூலசூட் சுமத்தைத்
துன்பத்துட் டுன்பமென் றுணர்ந்து
போற்றியே குகனைப் புந்தியைக் கடந்து
புகழுவேன் மதிமலர் புனைந்தே. (2)

## கடவுள் வணக்கம்.

உலகினை நனியாய்த் துள்ளமுந் தேய்ந்தங்
குணர்வதாய் நின்றவொன் றினையே
அலகிலா வெளியா யருமறை முடிவாய்
அகமதா யதீதமாய் வணங்கிப்
பலபல வாகத் தோன்றிநின் றொடுங்கும்
பாவனை வாசனை யனைத்தும்
இலகுகந் தர்ப்ப நகரெனத் துணிந்தென்
இதையமே பரமெனப் பணிந்தேன். (3)

## குரு வணக்கம்.

வேறு.

தோன்றுபொரு ளத்தனையு மாய்ந்து பார்நீ
துக்கசட மசத்தாகத் தோன்ற லாலே
ஆன்றவுணர் வானவெளி யொளியே நீநா
னனதா லுன்னைநீ யுற்றுப் பார்த்தே
ஊன்றுவது நின்மனதின் வேலை யென்றும்
உயர்குருவாம் தண்டறைவாழ் சுப்ப ராயன்
சான்றதுவாய் நின்றுமெனக் குபதே சித்த
சச்சிதா னந்தபதந் தலைமேற் கொள்வாம். (4)

## மகான்கள் வணக்கம்.

தன்னுள்ளே யெவ்வுருவுங் கண்டு கண்டு
தன்னையே யெவ்வுருவி லுங்கண் டாங்கே
அன்னியமொன் றணுவேனு மில்லை யென்றே
அனுபவித்து மநுபூதி கொண்டுள் ளத்தில்

மன்னுமதி தம்மிலவி யகம கிழ்ந்தும்
மாயமாம் விகற்பமெலாந் தவிர்ந்தெப் போதும்
உன்னியவவ் வானந்த வடிவாய் நிற்கும்
உளந்தெளிந்த பெரியோரென் னுளத்தில் வைப்பாம்.

## அவையடக்கம்.

### வேறு.

பேதைமை யான பிறப்பையே கடந்து
பெரும்பொரு ளுணர்வெளி யதனில்
சீதளமான சிந்தையோ டிலகும்
தெளிவினுட் கலந்தவான் றோர்முன்
பாதக மான வுலகினைக் கடக்கப்
பாடினே னநீதனூ லிதுவாம்
ஆதலா லென்னை யாதரித் தவர்கள்
அகமகிழ்ந் திருப்பர்கள் தாமே. (5)

## அதிகாரியும் பயனும்.

துன்பமா முடல்க ளொன்றுமே தோன்றாச்
சொரூபமே தனதுரு வாக
அன்புட னிகழு மானந்த மான
அருட்குரு சன்னிதி யதனில்
என்புதோ லுடனே யிருந்துமே வணங்கி
எனதுண்மை யாதெனத் தேர்ந்து
பின்பிறப் பென்னும் பேதைமை கெடவே
பேசுவோ னிதற்கதி காரி. (6)

## நூல்.

### அறுசீர் விருத்தம்.

தோற்று முலகைச் சோதிக்கின் சோதியறிவுந் துலங்கி விடும்
ஆற்ற லுடனே யவ்வறிவை அருமா மறையு மறைவதனாற்
போற்றுங் குருவு முபதேசம் புரிந்து மனதைத் தன்வசமா
யேற்றுங்கொண்ட படியாலே யெல்லா மாகி யிருப்போமே.

கனவா முலகை யனுதினமுங் கண்டுகண்டு வருவதனால்
கனவா முலகு மனுதினமுங் காணு நமையது காணாது
கனவா முலகு நம்மிடத்தில் கற்ப னையாய்த் தோற்றுவதால்
கனவா முலகு நானேநான் காணு மறிவே யென்னுருவம்.

பாழு முலகை நாடோறும்பார்த்துப்பார்த்துச் சுகிப்பதனால்
பாழு முலகு தினந்தினமும் பார்க்கும் நமையது பாராது
பாழு முலகை நாமறிவோம் பார்க்கும் நமையஃ தறியாது
பாழு முலகு அஞ்ஞானம் பார்க்கு மறிவே மெய்ஞ்ஞானம்.

### வேறு.

இருக்குமிவ் வுணர்வை இருக்குவே தத்தில்
இருப்பென வுணர்த்தியே யளித்தும்
இருக்குமிவ் வறிவைச் சிந்தனை செய்தும்
இன்புரு வாய்விளங் காமல்
இருப்பதா முலகென் றெண்ணியே நெஞ்சில்
இராப்பக லோய்வின்றி நைந்து
இருக்கின்ற தாலே பிரக்ஞானம் பிரம்மம்
இன்புரு வாகவே யுரைக்கும். (4)

அகமென வுடலை யாய்ந்துண ராமல்
அகங்கொண்டு திரிவதா லன்றோ
அகம்பிர மாஸ்மி எசுர்வே தத்தில்
அறைந்தது சீவகா ருண்யம்

அகமென லெதுவோ அப்பொருள் காண
அருட்குரு சன்னிதி யதனில்
அகமென லாரிவ் வுலகெனல் யாதென்
றடங்கியே கேட்டிட வேண்டும். (5)

வேறு.

சாமமறை முடிவிலே விளங்கும் ஞானம்
தத்வமசி யென்றுரைக்கும் பதமூன்றாகும்
ஓமென்ற பிரணவமே தத்வ மசியாகும்
உரைக்கின்றேன் உற்றுக்கேள் வாக்கி யத்தை
ஆமென்ற தத்பதமே ஈச ளுகும்
அதற்கடுத்த துவம்பதமே சீவ ளுகும்
தாமென்ற அசிபதமே ஐக்ய மாகும்
சற்குருவு மிப்படியே யுபதே சித்தார். (6

ஆனதா லெல்லாமே பிரம்ம மென்றோங்
கதர்வணமாம் வேதத்தி லறைந்த தாலே
கானலே நீர்போலத் தோற்று தல்போல்
கற்பனையா முலகதனைக் கடந்துள் ளோங்கும்
வானுருவா முணர்வதனை மதித்தா ராய்ந்து
மகிழ்ந்துமே மறைவழியி லனுப வித்துத்
தானதுவா யெப்போது மிருப்ப தென்றே
சந்தேகந் தீர்ந்துநீ சாதிப் பாயே. (7)

வேறு.

அறிவாகிய பொருளே நிதம் அறையும் மறை தெளிவாய்
குறியில்குறி பொருளே யருட் குருநாத னுரைத் தார்
பிறிவொன்றற நிறைவொன் றதைப்பிழையொன் றறவுணர்நீ
வெறியாகிய வுலகங் கெடும் வெளியா கியே மகிழ்வாய். (8)

வேறு.

மனமொன்றை யாய்ந்து மறிவாய் நிறைந்த
மதியாய் விளங்கி யதுவே
நினைவொன்றி நின்று மறையாம லென்றும்
நிலையோ டிருந்து முழுதும்
கனவென் றுணர்ந்து மகமுந் தெளிந்து
கலையும் மறைந்த குறியே
நனவென்று கண்டு பயமுந் தொலைந்து
நடுவா யமர்ந்து மகிழ்வாய். (9)

சமாதி.

மகிழ்வா யடைந்து குணமுங் கடந்து
மனமும் மிறந்த வெளியே
அகமென் றுணர்ந்து மறையும் புகன்ற
வமைவே மிகுந்த பொருளில்
சுகமா யிருந்து மயலுந் தொலைந்து
தொழிலேது மின்றி முடிவாய்
நிகழ்வான போது சகமும் மறைந்து
நினைவொன்று மின்றி யுணர்வாய். (10)

வேறு.

உலகதனை யாய்ந்து மொருமுடிவி னின்று
முணர்வினில் மகிழ்ந்த படியே
பலகலை தெளிந்து கருவுரு கலைந்து
பரமகுரு சொன்ன வழியே
அலைமன மிறந்து சுகமது தெரிந்து
மகிலவுல கென்று மிலையென்
றிலகுமறி வேயுன் னுருவென நினைந்து
மிதயம தமூர்த்தி யோய்வாய். (11)

வேறு.

ஒய்ந்தோய்ந் துணர்ந்து மொளியாய் விளங்கி
ஒருபோது மொன்று மிலையென்
றுய்ந்தாய்ந் தடங்கி யதீதம் விளங்கி
யாராலு மெட்ட முடியாத்
தோய்ந்தார்ந் தெழுந்த சுடரோ டிருந்து
தொடர்துன்ப மான கரணம்
மாய்ந்தான போது மனமே தெளிந்த
வாழ்வாக நின்று மகிழ்வாய். (12)

வேறு.

சாகிரத்துஞ் சொப்பனுத்துஞ் சுழுத்தி யுள்ளுஞ்
சார்ந்துநிற்கு முணர்வொளியை நன்றாய்நோக்கிப்
பார்க்கின்ற ஞானதுவே சத்தாய்த் தோன்றும்
படபடத்த மனமதுவே மாயை யாகும்
தீர்க்கமுடனாய்ந்தாற் றெளிவாய்த் தோன்றும்
தெரிந்தாயா ரகமுடலென் றவித்தை சார்வார்
ஆக்கைகளா மூன்றையுமே நீக்கி நின்றால்
ஆனந்தம் நமதுண்மை வடிவ மாமே. (13)

வேறு.

வெளி யாகிய வுணர்வா மதை விதிமா லரன் புகழ்வார்
அளவொன் றமில் பொருளே குறி யறிவே நம துருவென்
றுளமே யக மதையாய் பவ ருணர்வா கவே திகழ்வார்
தெளிவா யது மிதுவா கவே தெரிவார் மதி யுடையார். (14)

மதியாகிய மனதை ஒரு மனதால் மன தினிலே
பதியாயக முகமாகவே பாரா மலே பார்க்கின்
இதினால் நம தறிவே யது வெனவே வெளி யிலகு
மிதுவே பதி யிதுநா னென விதுவீ டென நிகழ்வாய். (15)

வேறு.

எனையொழிய ஒன்று மிலையென நிகழ்ந்தும்
இலதுளது மான வெதுவும்
எனதுருவ மன்றி யிலையென வுணர்ந்தும்
இதையமதி லைய மறவே
அணியம திறந்த வறிவுரு வடைந்தும்
அழிவுளது மன்றி யகமாய்
இனிமையென நின்று மனுபவம் விளங்கி
எலையதுக டந்து மொளிர்வாய். (16)

வேறு.

விதமுறு முளமே வெளியென வுணர்ந்த
விசேடமே யறிவென மகிழ்ந்து
திதமுறு நாளும் செகமதில் வாழ்ந்தால்
சேர்வது சீவன்முத் தியுமாம்
இதம்பெறு மிதுவே திறமறிந் திருக்கின்
ஈறிலா விதேகமுத் தியுமாம்
உதயமு மீறு மொன்றுமே யில்லா
உயர்பத நானென நினைவாய். (17)

உலகிலே நிகழு மெவ்வித மதமும்
ஊன் றியா ராய்ந்துமே பார்க்கின்
பலவித மான கொள்கையோ டிலகும்
பாவனை கற்பனை யதனால்
இலகுகற் பனைகள் பாவனை களையும்
எவ்விதம் நீக்குவ தெனிலோ
அலகிலா வுணர்வா லகமுக நோக்கில்
அழித்துமே யமைதியாய் வாழ்வாய். (18)

வேறு.

தேகமென முறுப்புகளைச் சேர்ந்துஞ் சேராத்
தேகியென வுணர் வொளியை ஓடிநாடி
வேகமதா யுள்ளுள்ளே யாய்ந்து மோய்ந்தும்
வெறுப்பில்லா வானந்தம் விளங்கு மட்டும்
மாகமதாய் மனதுருவை மாய்த்து நின்று
மாயைமுத லியாவையுமே நாச மாக்கி
ஏகவெளி யொளியான பரசிவத்தை
எப்போது மிருதயத்தில் வைப்பாய் நீயே. (19)

வேறு.

தனக்கென வுருவ மொன்றுமி லாத
சகபர முயிரெனத் தவிக்கும்
மனத்தினை யாய்ந்து மாகம தான
மாயையைக் கடந்துமே நிகழும்
தனந்துசின் மயமாந் தற்பர மான
சாட்சியாய்த் தனித்துமே நிற்கின்
அனைத்தவத் தையுமா ரோபம தாகி
ஐயமி லுளந்தெளிந் துணர்வாய். (20)

வேறு.

உளமே தெளிந் துணரில் முழு துலகும் பர முயிரும்
வெளியா கவே திகழும் மதை வேதங் கொடு பார்க்கின்
வளமா மிது சரியா கவே மயல்போம் மினை துள்ளில்
அளவும் பத மதுவை யமில் அடைவே முடி வாகும். (21)

வேறு.

முடிவே யுணர்ந்த வழியே தெளிந்து
முழுதும் மடைந்த பொழுதே
படிமீ திருந்து தொழிலே புரிந்து
பவமே கடந்த நிலையில்

உடலே மறந்து மொளியே நிறைந்து
முயிரே துறந்து பெயரா
திடமே துணிந்து மிதுவென் றுணர்ந்து
மினிதாக நின்று வாழ்வாய். (22)

இனிதான வாழ்வு மெனையன்றி வேறிங்
கிலையென் றுணர்ந்து திடமாய்
நனவோ டிருந்து மொழி யாமை யான
நலமே மிகுந்து முடிவில்
மனதான ரூபம் வெளியாய் விளங்கி
மகிழ்வா யடைந்த நிலையில்
கனவான தூலம மறைவோ டிருந்த
கணமே முடிந்த சுகமாம். (23)

கணமே மடிந்து வருபோது மின்பு
கருவில் நுழைந்து வெளியே
அணுவாய் மிகுந்து பெரிதாய் வளர்ந்தும்
அருளாய் நிகழ்ந்தும் பொருளாய்
உணர்வாய் மகிழ்ந்து முலகுங் கரைந்திங்
குளமுந் தெளிந்த முடிவில்
துணிவாக நம்மை யொளியென் றுணர்ந்து
சுகமா யமைந்து வாழ்வாய். (25)

வேறு.

எவ்வுலகு மெவ்வுயிரு முற்று ராய்ந்தால்
என்றுமே துன்பமல்லா லின்பமில்லை
எவ்வுருவு மெவ்வின்பும் மாயை யாலே
என்றுமே கற்பனையாய்ச் செய்த தாகும்
எவ்வினையு மெக்காலும் பொருளே யில்லை
இருப்பதுபோற் றோற்றியனு பவிப்ப தாலே
எவ்வுயிரு மெப்பொருளு மாய்ந்து பார்க்கில்
இவ்வுலகு நீண்டகன வென்றே பார்ப்பாய். (25)

எப்பொருளைத் தன்மைத்தா யினுமப் பொருளை
இல்லையல வென்றேகி இனிமை யான
மெய்ப்பொருளைக் கண்டுணர்தாங் கறிய வேண்டும்
மேதினியி லெப்பொழுதுந் தெளிவாய் நின்று
பொய்ப்பொருள்க ளுள்ளத்திற் றுக்கத் தாக்கப்
புந்தியதைப் பற்றுமற் றடுத்துக் கொண்டு
சிற்பொருளை யனுதினமும் பழகி வந்தால்
செம்பொருளா மைக்யபதஞ் சேரலாமே. (26)

செம்பொருளா மைக்மபதஞ் சேர்வ தாலே
செகமதிலே பேதமையாம் பிறப்பே யில்லை
உம்பர்களு மப்பதத்தைத் துதித்துக் கொண்டே
உடல்பொருள்க ளாவியெல்லா முமதே யென்றும்
எம்பெருமான் பிரமாவின் பாதம் வீழ்ந்தும்
எங்களுடை யுண்மையுரு வுரைப்பா யென்றே
தம்பெருமை காண்பதற்கே தபித்தா ரென்றும்
சாற்றும் பிரம்ம கீதையிந்தச் சகத்தோர்க் கெல்லாம்.

கீதைகளு முபநிஷத்தும் பாஷ்யங் கூடிக்
கேட்பதே பிரஸ்தானத் திரயமென்று
வேதாந்த வாக்கியமா யான்றோர் சொன்னார்
வேட்கையொழிந் திந்தமகா வாக்கி யத்தை
வீதமுடன் சற்குருதாள் வணங்கி யேத்தி
விரும்பியே பொறிபுலன்க ளொடுங்கி நின்று
போதகன்முன் னையமறக் கேட்டு ணர்ந்து
புந்திதெளிந் துலகில்விளை யாடு வாயே. (28)

விளையாட்டே யிவ்வுலகம் வேறொன் றில்லை
விசுவாதி விராட்டு முதலியதெய் வங்கள்
விளையாடு மிடங்களுமிப் புரமூன் றாகும்
விதம்படுமித் தெய்வங்கள் வேறு மல்ல

விளைவொன்று மில்லாத வறிவா மொன்றே
வேறுபடும் பகுதியினால் பலதெய் வம்போல்
விளையாடுந் தொழிற்குணத்தை யாய்ந்து நோக்கி
வித்தையினா லுலகில்விளை யாடு வாயே. (29)

வித்தையென்றாற் பலபலவாம் வித்தை யல்ல
வேதமதில் முடி வாகச் சொல்லும் பிரம
வித்தையே நமதுள்ளம் விளக்குஞ் சோதி
விரியுங்கால் பலபலவாய்த் தோன்றும் பிரம
வித்தையே யொடுங்கும்போ தொன்றாந் தோன்று
விரிவொடுக்க மிரண்டையுமே யாய்ந்து பிரம
வித்தையே சத்தையெனத் திடமாய்க் கொண்டு
விளம்பிநீ யுலகில்விளை யாடு வாயே. (30)

விளம்புகிற எவ்வுலகு மெப்பி றப்பும்
வெறுப்புவிருப் புடனென்று மிருப்பதாலே
வளஞ்சிறந்த நமதுள்ளஞ் சாட்சி யாகும்
மாறுகற் றேன்றுவதே துன்ப மாகும்
களங்கமிலாப் பிரமமதே யினிமை யென்று
கருத்தினிலே சுருதிகுரு சோத னையோ
டளவையெலாங் கடந்தவனு பவத்தில் நெஞ்சை
அழுத்தியே யுலகில்விளை யாடு வாயே. (31)

அழுத்தமாய்ச் சுருதிகுரு வனுப வத்தா
லாய்ந் தாய்ந்து மனுவனுவாய்த் தேய்ந்து மேலே
பழுத்தமனம் பரவெளியிற் பற்றிப் பாய்ந்து
பார்க்குமிடம் நினைக்குமிடம் பரமே யாகி
வழுத்துலகுங் கற்பனையா மாயை யென்று
மதியுணர்வை விடாமலே விட்டு நாளுஞ்
சுழுத்தியிலே யிருப்பதுபோல் நனவி லெங்கும்
சுகமாகி யிருந்துவிளை யாடு வாயே. (32)

சுகமாகி யிருப்பதற்கே யெல்லோ ருள்ளந்
தொழிற்பட்டே யோயாம லலைந்து கொண்டு
மகமகமென் றனைத்துயிரி னிடத்திருந்து
வாளுள்மட் டுரத்துமே நிகழ்வ தாகும்
ககனத்திற் றெழிற்பட்டுக் கொண்டி ருக்கும்
காற்றுருவ மசைவான தோற்றம் போல
அகமென்னும் பிரமத்தில் மாயை யான
அசைவுலகா மென்றுவிளை யாடு வாயே. (33)

அசைவுலகை யாய்ந்தாய்ந்து முடிவி லொன்று
மசையாத வுணர்வொளியே நான்தா னென்றும்
உசாவுதலோ டிசைந்துமனந் தெளிந்து நாளும்
உறுதிபெறுந் திடமுடனே யையம் போக்கிப்
பசையற்ற பொய்ப்புலனும் பற்றை நீக்கிப்
பரமென்னுந் தன்னுருவைப் பார்த்துப் பார்த்துத்
திசைமுகனுஞ் சொன்னபொருள் சரிதா னென்று
திருப்தியாய் நின்றுவிளை யாடு வாயே. (34)

திருத்தியா யெப்போதும் வாழ்ந்து கொண்டு
செகமதிலே மோட்சயிச்சை யுடைய வர்க்கு
கருத்திலே கீழ்நிலையின் றுயரமெல்லாங்
காட்டியே மேல்நிலையின் சுகத்தை நன்றாய்ப்
பொருத்தியே யுள்ளத்தி லையம் போக்கிப்
புடைபெயர்தல் கெடும்வண்ண முபதேசித்தும்
ஒருத்தனுவுஞ் சிந்தையினிற் பற்று தாகி
உள்ளபடி யுலகில்விளை யாடுவாயே. (35)

வேறு.

உளமே பொரு ளாதியா கிது ஒருகாலமு மசையா
தளவொன் றுமில் மறையா மலே தனிநின்றதை யுணர்வாய்
வளர்வா யனுதினமே யதில் மனதின் சுகமழியா
விளையா டுக மதிகொண்டுநீ விளையாகிய வுலகில். (36)

வினையால் வரு முலகே யுயிர் விளையா டிட மாகும்
இனிதென் றிதை மனதோ டட னிரவும் பகலோயா
தனிவீட்டதை யுணரா மலே தனுவோ டுழல் கின்றாய்
வினையொன் றமில்மனதோ டடன் விளையாடுவா யுலகில். ()

வேறு

ஏந்தப் பொருட்கு முள்ளுள்ளே
இருந்து விளங்கு மறிவுதனைச்
சொந்தப் பொருளென் றெப்பொழுதுஞ்
சோதித் துணர்ந்து முறுதியுடன்
அந்தப் பிரமம் நானே யென்
றனந்த சனனங் களிற்செய்த
புந்திக்குகந்து மகிழுவது
புணரா விரியாப் பதமாகும். (38)

வேறு.

உடலாதி கரணமுத லொவ்வொன் றாக
உணர்வாலே யிதுபொருளன் றன்றே நேதி
மடல்மடலாய்த் தத்துவத்தைப் பிரித்துள் ளோங்கும்
மணிப்பொருட்கு மரணம்வரு மெனப் பயந்து
கிடுகிடுவென் றஞ்சிமிகக் கலங்கு மென்னைக்
கிஞ்சிக்ஞ சீவன்நீ யல்ல வென்று
படம்போல விளங்குமுனைப் பார்ப்பா யென்று
பரமகுரு சுப்பராய னுபதேசித்தார். (39)

பார்த்தபோ தென்னையனு தினமு மாய்ந்து
பரமகுரு சொன்னதிரு வேத மெல்லா
மோர்த்துள்ள முள்ளதுணர்ந் துரைத்த தாலே
உணர்வுருவ மயமன்றி யயல்வே றில்லை

தேர்த்தனிலே யிருந்துபோர் செய்ய வந்து
தியங்கியே வில்லதனைக் கீழே வைத்த
பார்த்தனுக்குப் பகவானன் றுபதேசித்த
பகவத்கீ தையினுண்மை பார்த்துக் கொள்ளே. (40)

வேறு.

கீதையை யுலகிற் கொலைநா லெனவே
கேட்பவர்க் குணர்த்திநல் லறிவின்
பாதையை மறைத்துப் பார்க்கின்ற வுருவிற்
பாசத்தை வைக்கும் பாதகர்காள்
சோதனை செய்தே சுகமதை யளிக்கும்
சுத்தவே தாந்தநா லதுவாம்
பேதையை விடுத்துப் பெரிதும் நீயாய்ந்து
பேரின்ப முற்று வாழ்குவையே. (41)

வாழ்வதில் அழியா வாழ்வையே யாய்ந்து
மற்றுள வாழ்வெலா மாயம்
வீழ்வெனத் திடங்கொண் டிருந்துமே என்றும்
மிகுந்துள வெளிதனை விரும்பி
ஆழ்வதே நோக்கி வகம்புற மின்றி
அமைதியோ டொடுங்கியே நின்றால்
தாழ்விலிவ் வுலகஞ் சித்திரம்போலத்
தன்னிலே தோன்றுமெப் போதும். (42)

தோன்றுவ தெல்லாஞ் சித்திர மென்னச்
சிந்தையி லனுபவ மெழுந்தால்
கான்றசோ றெனவே நாமரூ பத்தைக்
கற்பனை யாகவே மதிக்கும்
ஆன்றதா மறிவை யகமுகம் பார்க்கின்
ஆனந்த மாகவே விளங்கும்
ஊன்றியே யுணர்தி யுளத்தினி லையம்
ஒன்றுமே யிலாதினி வாழ்வாய். (43)

வேறு.

ஒன்றான வுணர்வெளியை நாடி நாடி
உளத்திலெழுங் கற்பனைக ளியாவு மாய்த்துக்
குன்றாமல் விளங்குமந்த வொளியைத் தானே
குருவருளா லனுபவத்தி லாழ்ந்து மேலுஞ்
சென்றதையும் வருவதையுங் கவனி யாமல்
திரிபுடிகள் தோன்றினுமே திடமாய்க் கண்முன்
நின்றதையே யனுபவித்துக் காலம்போக்கி
நிற்பதுவே சீவன்முத்தர் நிலைமை தானே. (44)

சீவன்முத்தர் நிலைமையே முமுட்சு வெல்லாந்
திடமாக சுருதிகுரு வனுப வத்தும்
சீவரவ ருள்ளத்து மாய்ந்து நோக்கிச்
சிறப்புறுத லுறுதியென ஐயந் தீர்ப்பாய்
சீவனென்ப துணர்வன்றி வேறே யில்லை
செகமாக வுதித்தொடுங்கி நிற்கும் போது
சீவனென்றும் பரமென்றுங் கற்பித் தார்கள்
செப்புமா யாவாதப் பேய்கள் தாமே. (45)

வேறு.

மாயாவாதந் தாங்க ளென மதித்தா ராய்ந்து தெளியாமல்
பேயாய்த்திரிந்து மிவ்வுலகில் பிரியாதிருக்கு மொருபொருளை
வாயால் வேறு வெறெ னவே மயங்கிவழுத்தும் மதியிலிகள்
தீயாம் பதவி முத்தி களில் திரிந்துஞ் சுழன்றும் வருவாரே.

சுழன்று திரியுங் காற்றது போல்
சுகம்போற் றோன்றும் பதவிகளில்
உழன்று களிக்கு மிவ்வுயிர்கள்
உணர்வாந் தன்னை யறியார்கள்

எழுந்து விளங்கி யொடுங்குமன
மிதயா காச வொளிதனிலே
அழுந்தி யிருக்கு மதியாளர்
அகமென் றிதனை யறிவார்கள். (47)

வேறு.

அறிவாளர் தங்க ளகமென்று கண்டிங்
கறிவாய் நிறைந்த வுருவே
பொறிவாயில் நின்று முலகாய் விளங்கி
புதிதாய் மகிழ்ந்த மனமாம்
பறியாகி யாகி முழுமோச மான
பலவாய் மயங்கி யுடலில்
வெறியோடு கூடி யதிலே யழுந்தி
விவகார மாகி நிகழும். (48)

நிகழ்கின்ற விந்த விவகார மான
நிலைபோல் விளங்கு முலகைச்
சுகமென்று நம்பித் தெரியா திருந்து
துயரே யடைந்த துயிரே
அகம்பிரம மென்று எசுர்வேத வாக்யம்
அறையுந்தன் னுருவை முடிவில்
மிகமாயை யென்று மதியாற் றெளிந்து
விளையாடி யுலகில் மகிழ்வாய். (49)

வேறு.

பெருக்கான சுருதியினாற் பிரபஞ் சத்தைப்
பிரித்துமே காரணகா ரியமா ராய்ந்தும்
செருக்கான மனமாயை யெல்லாம் நீக்கித்
திடமாக மெய்யறிவை யப்யா சித்தும்

ஒருக்காலு மொருபொருளு முண்மை யாக
உள்ளமதில் வையாம லுறுதியோடு
திருக்கான நமதுருவம் பரமே யென்று
தெளிவாகி யிருந்துவிளை யாடு வாயே. (50)

ஆடுவாய் மமதைமுத லெல்லாம் போக்கி
அகம்புறமாய் விளங்குமுன் சொரூபம் நோக்கித்
தேடுவாய் தன்னாலே தன்னிற் றன்னைத்
தேகாதி தத்துவமாம் பாரை நீக்கிப்
பாடுவா யுளம்விளங்கி யெல்லோ ருள்ளும்
பரம்பொருளு மெவ்வுயிரும் நானே யென்று
நாடுவாய் குருவருளை வாழ்வாய் நாளும்
நாடுகா டெனும்பேதம் நமக்கின் றாமே. (51)

நாடென்றுங் காடென்று மொன்று மில்லை
நமதறிவில் விளங்குவதால் நாமே யாகும்
ஏடென்ற வேதமே யுள்ள மாகு
மெய்ப்பொருளு மெக்காலு மாய்ந்து பார்த்துத்
தேடுவதே நம்முடைய மனதின் வேலை
திரிசியமாந் தோற்றமெலாம் நம்மை யாய்ந்து
நாடவே முடியாதெப் படியென் றாலோ
நம்மறிவில் மறைந்தோடிப் போவ தாலே. (52)

மறைந்தோடிப் போவதென்று லர்த்த மென்ன
மாயமா யனுபவத்தோ டிருப்ப தாலே
அறைந்ததே வேதமெலா மித்தை யென்றிங்
கனுபவத்தோ டிருந்தாலு மாய்ந்தா லில்லை
சிறந்தருக் வேதத்தி லெழுதி வைத்த
தெளிவுணர்வை யெடுத்தவுடல் மறைவ தன்முன்

நிறைந்தபரி பூரணமாய் உனதோ ருள்ளம்
நிகழ்ந்தையம் நீங்கியே வாழ்கு வாயே. (53)

நீங்கியே பிறப்பிறப்பிங் கொன்று மில்லா
நித்தியமாய்ச் சத்தியமா யினிமை யாகி
ஓங்கியே மனவாக்குக் கெட்டா தாகி
ஒளியாகி வெளியாகி யுள்ள தாகி
ஆங்கிதுவே யதீதபத மாகி யென்றும்
அழியாம லிருந்தபடி யிருப்ப தாகி
வீங்கியவிச் சாசத்தி யிறந்த காலை
விரிந்தமன மிறப்பதுவே மோட்சந் தானே. (54)

மோட்சமது மையத்தி னின்று நீங்கி
முழுதுமே தெளிந்துலகு விளையாட் டென்று
காட்சியெலாங் கண்ணென்று கரைத்துக் காட்டிக்
காண்பவர்க்கு மையமிலா தெடுத்துக் காட்டி
மீட்சியிலாத் தற்பதத்தைக் கருணை யாலே
வெகுவிதமா மபவாத யுக்தி யோடு
மாட்சிமையே யளித்துநிதம் மகிழ்ச்சி யோங்க
வாழ்வதுவே நம்முடைய மகிமை தானே. (55)

மகிமையெனல் பெரியோர்கள் வழியே யல்லால்
மற்றொன்று மிவ்வுலகி லினிமை யில்லை
அகிலமெனு மனுபவத்தை யாய்ந்து பார்த்தா
லவ்வளவுந் துன்பமன்றி யின்ப மில்லை
பகலென்று மிரவென்று மாறி மாறிப்
பாவனைசெய் தேசுகித்தும் பலனொன் றில்லை
இகமென்றும் பரமென்று மயங்கி யெங்கும்
இம்மாயைக் குள்ளடங்கி யிருப்ப தாமே. (56)

இம்மாயைக் குள்ளடங்கி யிருப்ப தாலே
இருக்வேதம் பிரக்ஞானம் பிரமமென்றும்
அம்மாயை நசிப்பதற்கும் எசுர்வே தத்தில்
அகம்பிரம்ம வநுபூதி காட்டிற் றன்றே
மும்மையிலு மதுவேநீ நீயது வாம்
முழுதுணர்ந்து தத்துவமசி வாக்கியத்தை
மைம்மாயை கடந்துமே விளங்க வென்று
மதித்துபதே சஞ்செய்து மகிழ வைக்கும். (57)

மகிழவே முமுட்சு வெலா மதர்வ ணத்தில்
மறைநான்கு மொன்றையே வுரைத்த தென்றும்
சகலவுல கெல்லாமே மித்தை யென்றுஞ்
சார்ந்துபார்த் தணுவணுவாய்த் தேய்ந்து ஞானக்
ககனமாய் மிஞ்சுவதா லெல்லாம் பிரமங்
காட்டினதால் சந்தேக மெல்லாம் நீங்கி
அகம்பிரமஞ் சகம்பிரம மனைத்து மென்றும்
அறைந்ததினு லெப்பொழுது மைய மில்லை. (58)

அறைவதெலாஞ் சரியெனவே கொள்வ தற்காங்
கருட்குருவின் சன்னதியில் வணங்கி நின்று
சிறைகிடக்கும் நானுரென் றிதனை யாய்ந்து
தெளிவான வேதாந்த வனுப வத்தால்
குறைவொன்று மில்லாத வாழ்வெ னக்குத்
கூடும்வகை சொல்லுமென்று குறிப்பாய்த் தானே
மறைவாக நில்லாமல் நேரே கேட்பின்
மனமகிழ்ந்து சற்குருவு முரைப்பார் தாமே. (59)

சற்குருவு முரைத்தபொருள் தனிதநக் கேட்டுச்
சாதுசங்கப் பழக்கத்தால் மனனஞ்செய்து

தற்சொரூபம் வெளியாகித் தெளிவு மாகிச்
சத்தானு வித்தமுதல் சமாதி யாறும்
அற்புதமென் றகம்புறம்நிர் விகற்ப மாகி
அனைத்துமே சங்கோச விகாச மென்றுங்
கற்பனையா மாயையென்றுங் கண்டு ஞானக்
ககனமென்றே திடங்கொண்டு நீடு வாழ்வாய்.

வேறு.

உலகொன்றில துணர்வொன்றுள
துயர்வொன்றிய ததன்மேல்
சலனங்களை மனனங்கொடு
சதிசெய்துள மகிழ்வாய்
இலதொன்றொரு பொருளொன்றிலை
எனையன்றியில் நிகழ்வும்
அலவென்றக லொளிகொண்டுள
மதில்வையனு தினமும். (61)

பரமொன்றிய மனதின்துயர் களுமென்றுமி லழியும்
மரணங்கொடு கவல்தந்திடு சனனங்கொடு விங்ஙன்
உருவங்களி லுழலும்மன திணிதென்பது மருவா
தரிதின்றிய வுணர்வொன்றதை அகம்வையனு தினமும். ()

வேறு.

பிறவிபுகுந் துழல்கின்ற வுயிர்க ளெல்லாம்
பேதைமையென் றேமறைக ளுரைப்ப தாலும்
அறிவுடையோ ரனுபவித்து யெழுதி வைத்த
அருள் நூலின் கருத்துமதா யிருப்ப தாலும்
பொறிபுலன்க டேய்ந்தொடுங்கி யேக மாகப்
போகுவதே யெந்நாளு மழியா வின்பம்

குறிகடந்த விவ்வின்பம் நாட்கள் தோறுங்
குன்றாமற் றுயிலிலனு பவிக்கின்றாரே. (63)

குன்றாமற் றுயிலிலனு பவிக்கு மின்பம்
கூறுவோ ரெங்குமிலை யதனு லாங்கே
என்றுமே யழியாம லிருக்கும் நம்மை
எப்பொழுதுஞ் சத்தமாத் திரமாய்ப் பார்த்தும்
ஒன்றுமே யதற்குவே ருக வில்லை
உதித்தொடுங்குந்தோற்றமெலாமாய்ந்துமுண்மை
அன்றெனவு மின்றெனவு மோய்ந்தும் நாமே
அழியாமல் விளங்குவதால் நாமே யின்பம். (64)

நம்மையன்றி யெப்பொருளு மிருக்கு மானல்
நாமனுபவ விக்கவினை செய்ய வேண்டும்
இம்மையினு மறுமையினு மெவ்வி டத்தும்
இருப்பதுபோற் றிகழின்பம் யாவு மித்தை
மும்மையினு மோரணுவும் பொருளே யில்லை
முன்னுளபோற் றோற்றல்மனே ராஜ்யந் தானே
எம்மையினு மிப்படியே விளக்க மானல்
எல்லாமு மெப்பொழுது மின்ப மாமே. (65)

இன்பமே யெனதுருவ மான தாலே
என்னிடத்தி லென்வினையே யெனைம றைத்துத்
துன்பமதை யினிமையாக் காட்டி மாயை
சுழல்கின்ற பிறவியிலே யழுத்திற் றன்றோ
அன்புடனே தண்டுறைவாழ் சுப்ப ராய
னருள்ஞான தேசிகனே யென்முன் வந்து
சின்மயமா முன்னுடைய நிசசொ ரூபம்
சிந்தையிலே யனுபவித்துத் தெளிவா யென்றார்.

தெளியநிட்டை கூடிசிந்தை யோய்ந்த போது
செகசீவ பரங்களெலாம் பாழாய்த் தோன்றி
ஒளியுணர்வா யகமுகமா யுள்ளே யாய்ந்தாய்ந்
துற்றுப்பார்த்தேன் சுகமாய் நின்றேன் யானே
வெளிமுகமாய் விழித்துலகு மறிவாய்க் கண்டேன்
வேதம்விதித் ததுஞ்சரிதா னென்றேன் ஆசான்
களிதருமா காமியசஞ் சிதங்க ளெல்லாம்
கழிந்துபிரா ரத்தமனு பவிப்பா யென்றார். (67)

திரபிரா ரத்தமனு பவிக்கும் போது
திகழ்வெளியா யைம்பூத மில்லா மோன
பிரமவித்தாய் வரன்வரியான் வரிட்ட னெல்லாம்
பிறப்பிடமா யித்தனைக்கும் வேறு மாகி
அருவுருவா யுணர்வொளியா யதற்கப் பாலாய்
ஆரோப அபவாத மென்று சொல்லும்
விரிவொடுக்க மென்றுமே தோன்றா தான
விதேகமுத்தி நிலையடைந்து வாழ்வா யென்றார்.

இந்தநிலை யென்குருதா னென்னை யெண்ணி
லிருப்பதையே சுருதியுத்தி தோன்றக் காட்டிச்
சொந்தநிலை யாக்கிவைத்து மென்று மென்னைச்
சுயம்பாகத் துலக்கியிடர் விலக்கா விட்டால்
பந்தமதி லழுந்திசந் தேகந் தீராப்
பலசன்மங் களிற்சுழன்று பரித பித்து
மந்தமதி தெளியாமல் மதிம யங்கி
வாடியே யெழுபிறப்பிற் றிரிவே னையோ. (69)

ஐயையோ இறந்தவுயிர் எங்கே யென்றிங்
காராய்ந்து மறிபவர்க ளெங்கு மில்லை

ஐயையோ இருக்குமுயி ருடல்நா னென்றே
ஆசைவைத்துத் தெளியாமற் சாகின் றார்கள்
ஐயையோ இனிப்பிறக்கின் றவர்க ளெல்லா
மாராய்ந்தா லிருக்குமிடம் விளங்க வில்லை
ஐயையோ மனிதவுட லெடுத்துந் தன்னை
ஆயாமல் மதிமயங்கி யழிகின்றாரே. (70)

ஆய்ந்துலகு சீவபரந் துச்ச மென்றே
அருமறையுங் காருணியத் தோடொவ் வொன்றாய்
ஆய்ந்துமே காட்டி முமுட் சுக்க ளுக்காய்
ஆரோப மபவாத யுக்தி யோடே
ஆய்ந்தவவ் வறிவினுக் கிருப்பிடந் தான்
அகமென்றும் பிரமமென்றும் பேருங்கூறி
ஆய்ந்துதெளிந் துணர்ந்துபா ரென்று ரைக்க
அகஞ்சு கமா யிருக்குமிடம் வெளியாயிற்றே. ()

வெளியென்றே வேதாந்தங் கடந்து ரைத்தும்
விளக்கிருக்கத் தீத்தேடும் மடைமை போல
வெளியான வுணர்வுருவாய் நாமி ருக்க
உள்ளமதைப் பரமாக்கி யதைவே றாக்கிப்
பிளவுபட்டு மனமுருகில் மாயை போமோ
பேசாத விடம்பிரம ஞான மென்றும்
அளவில்லா வந்தமிலை நீதா னென்றும்
அருட்குருவு மறைந்தாரே ஐயம் போக்கி. (72)

அறைந்தபடி யங்கிலையி லையத் தீர்ந்தும்
அளவில்லா யுகமென்றுங் கற்ப மென்றும்
பிறந்திறக்கு நாளென்றும் மாச மென்றும்
பிரிவுபடும் வருஷமென்றுங் கணமே யென்றும்

மறைந்துதிக்கு மிரவுபகல் கால மென்றுங்
மதித்தான்றோர் கடையூரி லமிர்த லிங்கங்
குறைந்தமதி தெளியவைத்தா ரந்த நாளில்
கூற்றுவனை மார்க்கண்டன் வென்று னென்றே. ()

அந்தவிதம் மார்க்கண்டன் வென்றாற் போல
அறிவாலே காலனைநா மாய்ந்து மிஞ்சுஞ்
சொந்தநம துணர்வுதிருக் கடையூ ரந்தச்
சோதியே அமிர்தலிங்க ஈசனாகும்
இந்தவிதங் காலதத் துவத்தை யாய்ந்தால்
இதிகாசக் கருத்தையெலாம் வெளிப்படுத்திப்
புந்திமகிழ்ந் தறிந்திடலாம் பெரியோர் சொன்ன
புராணங்க ளெல்லாமத் வைதந் தானே. (74)

வேறு.

செத்து முதிக்கிற விம்மனமே யுல
கத்துய ரென்று கெடுக்கு மவர்க்கே
முத்தி தெரித்தும் பவப்பகை வென்றுயர்
அத்து விதத்தை நிகழ்த்துவ தாகும். (75)

உதித்து விளங்கி மறைந்து மொடுங்கு
மனத்தை நசித்து மிருப்பை விளக்கி
மயக்கை விடுத்துஞ் சுகத்தை விரித்து
சடத்தை மறந்தவர் சாகிற தில்லை. (76)

வேறு.

மறைவொன் றில தகமொன் றின தொளிகுன் றில ததனை
அறையும் மறை களின்முன் பனு பவமொன் றிப வுணர்வை
இறையுந் துக ளதுவின் றியென் னுளமே யெனு நிகழ்வால்
உறையும் மரு ளிதயந் தனில் நிலையாமலே யொழியும். (77)

வேறு.

மதயானை யென்று மிலையென் றறிந்து
மரமென்று கண்ட போது
மதியுந் துணிந்து பயமுந் தெளிந்த
மயமாமிவ் வுவமை போல
உதியாத மாயை யிலையென்று கண்டும்
ஒளியென் றுணர்ந்த பொழுதே
உளமுந் துணிந்து முலகங் கரைந்தும்
ஒருங்கேக மாகி நிகழும். (78)

நிகழ்கின்ற போதும் விரிகின்ற போதங்
குலகென்ற ரூப மடையும்
திகழ்கின்ற வுலகு குவிகின்ற போதங்
குணர்வென்ற போதும் நிகழும்
இகழ்கின்ற மாயை எதுவென்று கொள்வ
திதுவென்று சொல்லொ ணுதால்
புகழ்கின்ற தீத நிர்வசன நாமம்
போதித்த திந்த முறையே. (79)

வேறு.

ஆதித்தன் முன்னிலிரு ளிலது போல
அகம்பிரம வனுபவத்தில் மாயை யில்லை
வேதாந்தஞ் சொன்னதுவு மிதுவே தேர்ந்த
விசாரணையில் மாயையநிர் வசன மாகும்
மூதுணர்வை யறியாதார்க் குலகு சத்து
மூன்றையுமே யாராய்ந்து முடிவில் நின்றால்
சோதியிலே மறைவிதித்த வழிகள் யாவும்
சொன்னபடி உலகசத்தாய்த் தொலையுந்தானே ()

அனுபவத்தில் மாயையென்ப தில்லை யாகும்
ஆராய்ந்து பார்க்கிலனிர் வசனமாகும்

தனதுடலைச் சத்தியமா யனுப வத்தில்
சந்ததமு மிவ்வுயிர்கள் பார்ப்ப தாலே
இனிமையா யிவ்வுலகு சத்து மாச்சு
இன்னதென்று சொல்லவே முடியாதென்று
தனிமையாய் மாயைக்கோ ரிலக்க ணந்தான்
சான்றோரு மீசனுமே சொன்னு ரன்றோ. (81)

சொன்னதால் நாமெல்லா மாயை யிற்றான்
தோன்றிவிளங் கியுமொடுங்கிப் போவோமையோ
இன்னதென்று விளங்காத விந்த மாயை
இல்பொருளென்றே துணிந்தார்பெரியோரெல்லாம்
பின்னபின்ன மாய்த்தோன்றி மயக்க வைக்கும்
பிரித்துநா மணுவணுவாய்க் கரைத்தாற் போகும்
தன்னுடைய பேதமையே மாயை யென்று
தான்றெளிந்து தற்பரமா யிருக்க வேண்டும். ()

உணர்வைவிட்டுக்காண்பதெல்லாம் பொருளாய்த்தோன்றும்
உணர்வினு லேபிரித்தா லணுவாய்த் தோன்றும்
உணர்விலே மாயைமகத் தாய்க்காண் பிக்கும்
உணர்வுதா னெவ்வினையுஞ் செய்து கொள்ளும்
உணர்வுதான் தெளிந்துவினை யழித்துப் பார்க்கும்
உணர்வான நம்முள்ளந் தெளிய வேண்டும்
உணர்வொன்றே எப்பொழுது முள்ள தாகும்
உணர்வுதான் எப்பொழுது முறுதியாகும். (83)

அறிவான நம்முள்ள மாய்ந்து பார்த்தால்
அறிவான நம்முள்ள மொளியாய்த் தோன்றும்
அறிவான நம்முள்ள மாயா விட்டால்
அறிவான நம்முள்ள மிருளாய்த் தோன்றும்
அறிவான நம்முள்ள மாய்ந்து பார்த்தால்
அறிவான நம்முள்ளில் வினையே இல்லை

அறிவான நம்முள்ள மாயா விட்டால்
அறிவுதா னெவ்வினையுஞ் செய்த தாகும். (84)

அறிவான நம்முள்ள மாயா விட்டால்
அறிவிலே யெல்லாமா யாவுந் தோன்றும்
அறிவான நம்முள்ள மாய்ந்து பார்த்தால்
அறிவிலே யல்லவுமா யாவுந் தோன்றும்
அறிவான நம்முள்ள மாயா விட்டால்
அறிவிலே சுகதுக்கங் கலந்து காணும்
அறிவான நம்முள்ள மாய்ந்து பார்த்தால்
அறிவாக நம்முள்ள மமைதி யாகும். (85)

திருந்தியவே தாந்தமெல்லாந் திருக்கு வென்றுந்
திரிசியமென் றிரண்டாகப் பிரித்து மொன்ருய்ப்
பொருந்திநிற்கு மிடந்தனையு முமுட்சு கட்குப்
போதனைசெய் துஞ்சந்தே கத்தை நீக்கி
இருந்தபடி இருந்ததனை யிருந்து காட்டி
எல்லாமா யல்லவுமா யிருக்குந் தன்னைப்
பெருந்தகையார் பரஞ்சோதி முனிவர் சொன்னார்
பிறங்குதிரு விளையாடற் புராணத் துள்ளே. (86)

வேதாந்த சாஸ்திரஞ்சற் குருவின் முன்னே
விட்டுவிடா லக்கணையை விசாரஞ் செய்தும்
போதமாந் தன்னுருவைப் புகலக் கேட்டுப்
புந்தியிலே சந்தேக மெல்லாந் தீர்ந்தும்
சாதனையாய் நெடுநாளுந் தெளிந்து நின்று
சங்கற்ப விகற்பங்க ளனைத்து மாய்த்தும்
ஏதமிலா வறிவுருவே திடமென் றெண்ணில்
எல்லாமா யல்லவுமா யிருந்தே காட்டும். (87)

எல்லாமாய் விளங்குமிடம் விழிக்குங் காலம்
இந்தநிலை யெவ்வுயிருஞ் சுகத்தை நாடும்

அல்லவுமாய்க் காணுமிட முறங்குங் காலம்
அந்தநிலை யெவ்வுயிருஞ் சுகமாய் நிற்கும்
நில்லாத விம்மாயை விளையாட் டைத்தான்
நீண்டகனை நீண்டமனை ராஜ்ய மென்றும்
எல்லையிலாப் பரத்தி லத்தியாச மென்றும்
இசைத்திதனைச் சங்கோச விகாசமென்பார். (88)

இதிலுள்ள சாட்சியைத்தான் பிரம்ம மென்றும்
இதையறிந்தா லந்நிலையே மோட்ச மென்றும்
மதியறியார்க் கெப்போதும் பந்த மென்றும்
வகுத்துமே வேதாந்தஞ் சொல்வ தாலே
எதற்குமே யஞ்சாமற் றிடமாய் நின்றும்
இம்மாயை நம்மிடையே விளைவ தென்றும்
உதித்தொடுங்கும் மாயையிது மித்தை யென்போம்
உதிக்குமிட நம்முடைய சொரூப மாமே. (89)

பொல்லாத விம்மாயை நசிக்க வென்று
போதகுரு சொற்படிசிந் தித்த வர்க்கே
எல்லாமா யல்லவுமா யிருக்குந் தன்னை
இருந்தபடி யிருந்துமே காட்டி நிற்கும்
கல்லாத கல்வியெலாங் கற்ற போதுங்
கலங்குமன மொருமோதும் நிலைகொள் ளாது
சொல்லாமற் சொன்னகுரு வழியே சென்று
சுகமான தன்னையனு பவித்து வாழ்வாய். (90)

அருவுருவா யிருக்கின்ற சுயம்பிர மத்தில்
அதுவிதுவென் றியம்பமுடி யாத தான
ஒருசத்தி யுண்டென்றே மறையுஞ் சொல்லும்
உள்ளதுபோற் றோற்றுகின்ற வந்தச் சத்தி
பிரகிருதி முதலான வனந்த ரூப
பேதம்போ லுலகுருவாய்ப் பரிண மித்துத்

திரிபாகி மனதுருவாய் நடுவில் நின்று
செகமென்றும் பரமென்று மலையு மன்றே. (91)

செகமென்றும் பரமென்று மலைந்து கொண்டு
தீராத சுழல்காற்றுச் செத்தை போலச்
சகலவித பதவியென்று மதிம யங்கிச்
சனனமிலா விடந்தேட முயற்சிக் காமல்
வெகுவிதமாந் துன்பங்க ளனுபவ வித்தும்
வேறுபடா வத்துவிதந் தனைம றந்தும்
அகமுடலென் றதிதிடமாய் நிச்ச யித்தும்
அழிவில்லா மோட்சசுக மறந்த தன்றே. (92)

முத்திநெறி யறியாம லிச்சை நண்ணி
மூர்க்ககுண மேலிட்டு மதிம யங்கி
மத்தமுறும் பிறவியிலே யகப் பட்டையோ
மாறுத துன்பத்தை யனுப வித்தும்
இத்தனையு மின்பமென்றே யெண்ணி யெண்ணி
இதிலிருந்து கரையேற முயற்சிக் காமல்
சித்தமது கலங்கியே வாழ்வா யாகில்
சிவபதமா மைக்யமுத்தி பெறுவ தெங்கே. (93)

சிவபதமா மைக்யமுத்தி யெதுவென் றாலோ
சித்தமதைச் சித்தத்தா லாய்ந்து தேய்ந்தும்
அவத்தைகளே ழுங்கடந்து மதீத மான
அகண்டபரப் பிரமத்திற் சித்த மோய்ந்தும்
துவிதமென்னு மாயைதனைக் கடந்து நின்று
தூலவுடல் நானுமன்று லெனது மன்றால்
இவனவனு மவனிவனு மெவனு மன்றென்
றிருந்தபடி யிருப்பதுதான் ஐக்ய முத்தி. (94)

இருந்தபடி யிருக்கின்ற பரப்பிரம் மத்தை
இல்லாம லிருக்கின்ற மாயை தானே

மரத்தைமத யானைமறைத் ததற்கொப் பாக
மறைத்திருக்கு மெப்பொழுது மதற்கு மேலும்
திருக்கான பரப்பிரம்ம மொன்றை யன்றோ
திருசியமா மாயைபல வாய்க்காண் பிக்கும்
ஒருப்பொருளாம் பிரமமாத் திரமே யல்லால்
உபயமெனுங் கற்பனைப் பேரொன்று தாமே. (95)

என்றுமே யெப்பொருளு மாய்ந்தா லில்லை
எங்கிருந்து நாம்வந்தோ மென்று பார்த்தால்
ஒன்றுமே புரிவதில்லை பாழாய் நிற்கும்
உணர்வொன்றேயுள்ளதென்று வேதஞ்சொல்லும்
குன்றுதலுங் கூடுதலு மொன்றுங் காணும்
குருவருளா லனுபவத்தைத் திடமாய்க் கேட்டு
நன்றாகச் சிந்தித்துத் தெளிவா யானால்
நானெனுஞ்சொற்பொருளழியாச்சுகங்காண்பாயே.

ஆனதா லகமுகத்தி லாய்ந்து தேடி
அழியாத சுகத்தையே அறிந்து நாடிப்
போனதா லான்றோரவ் வழியிலே நான்
போகவே பாடுபட்டுப் பார்க்கும் போது
தானான தன்மயமே யல்லா லொன்றைத்
தலையெடுக்க முடியாமல் தடுத்தா லாங்கே
நானேதா னயலாக வெனக்கே தோன்றி
நழுவாமல் நழுவுகிற சுகங் கண்டேனே. (97)

சுகமாக வமர்ந்துமே நிட்டை கூடிச்
சுழுத்தியிலே யிருப்பதுபோல் நனவிற் பார்த்தால்
செகமுயிர்கள் சனித்து மிறக் கின்ற தென்றும்
சிந்தையிலே வந்து வந்து போவ தாலே
இகமென்றும் பரமென்றும் பந்த மோட்ச
மிரவுபக லென்றுமே யிக்கா லந்தான்

உகமென்றுங் கற்பமென்று மாறிக்கொண்டே
உள்ளத்திற் கற்பனையாய்த் தோற்று தந்தோ. ()

உளம்படிநாம் சங்கற்பம் செய்து கொண்டே
உறங்கும்போ தவ்விடந் தோற் றிடுங்கனவு
தெளிந்தவிட மறைந்துபோ கின்ற தைப்போல்
செகசீவ கணமெல்லா மாய்ந்து பார்த்தும்
அளவைகளுக் கடங்காத பரந்தெ ளிந்தால்
அணுவளவு மில்லாமல் மறைந்துபோகும்
விளம்பினு ரான்றோர்க ளெல்லாங் கண்டு
விதிமாலு மரனும் விளக்கினரே. (99)

விளக்கியே சொல்லிவிட்ட படியீதாகும்
வேதங்கள் விதித்ததுவு மிதுவே யாகும்
உளந்தெளிவா யாராய்ந்தா லெல்லாந் தோன்றும்
ஒருபொருளு மில்லாம லுணர்வு காணும்
பிளவொன்று மில்லாத பிரமந் தானே
பேதம்போல் பாவனையால் தோன்று தாங்கே
வெளியொளியா யறிவுருவா யுள்ளந் தோய்ந்தா
லுள்ளபொரு ளுள்ளபடி விளங்குந்தானே. (100)

எல்லாமா யிருக்குமிடம் நாம ரூப
இதுவேதான் பிறப்புமிறப் பின்ப துன்பம்
அல்லவுமா யிருக்குமிடஞ் சூனி யந்தான்
அதில்விளங்கு மனுபவமே மாயை யாகும்
பொல்லாத விம்மாயை விளையாட் டைத்தான்
புவியிலுள்ளோ ருண்மையெனப் பாவித் தார்கள்
கல்லாத கல்வியெலாங் கற்று மிந்தக்
கற்பனையைக் கடக்காமற் சுழல்கின்றாரே. (101)

ஒன்றுமே யில்லாத காட்சி தானே
உணர்வெளியாம் நம்முடைய வுண்மை ரூபம்

குன்றுதலுங் கூடுதலு மில்லா மோனக்
குருவருளா மனுபவமே யினிமை யாகும்
பொன்றுமுடல் விழுவதன்முன் னாய்ந்து பார்த்துப்
போதமே யெவ்வுயிரின் வடிவ மென்ன
என்றுமே யிருந்தபடி யிருந்து கொண்டே
எல்லாமா யல்லவுமாய்ச் சுகித்து வாழ்வாய். (102)

காலதேச வஸ்துக்கள் மூன்றுங் கூடிக்
கருத்திலே பாவனையாய்த் திடமாய்க்கொண்டு
ஞாலம்போ லனுபவித்துச் சுகிக்கின் றேமிஞ்
ஞாபகத்தி னுண்மைதனை நாடிப் பார்க்கின்
தூலமுதல் பிரகிருதி முடிவா யுள்ள
சொந்தமம துருவல்ல வென்றே யேகி
மூலமா மெவைக்குமிருப் பிடந்தா னென்றும்
மூதுணர்வென் றும்பிரம மென்றுங் காண்போம். ()

சுத்தமாம் பிரமத்திற் றேன்றுஞ் சத்தி
சொல்லமுடி யாதென்றே சுருதி சொல்லும்
சத்திசத்த னில்லடங்கி யுறங்கும் போது
சச்சிதா னந்தமனு பவிப்ப தாலே
அத்துவிதத் தையறிந்து மையம் நீங்கி
அனைத்துயிரு மொன்றென்றே யாய்ந்து நோக்கி
எத்துயரு மில்லாவப் பிரமந்தன்னில்
இருதயத்தை வைத்துவிளை யாடு வாயே. (104)

இருதயமே நம்முடைய வுணர்வு ரூபம்
இருதயமே யெவ்வுயிரின் பிறப்பு ரூபம்
இருதயமே யெவ்வுயிரின் இறப்பு ரூபம்
இருதயமே யெவ்வுயிரின் துன்ப ரூபம்
இருதயமே யெவ்வுயிரின் இன்ப ரூபம்
இருதயமே யெவ்வுயிரின் சலன ரூபம்

இருதயமே யெவ்வுயிரின் னமைதி ரூபம்
இருதயமே பரப்பிரம ரூப மாமே. (105)

இதயமே யநேகமாய்த் தோற்ற மாகும்
இதயமே யேகமாய்த் தோற்ற மாகும்
இதயமே தூலமாய்த் தோற்ற மாகும்
இதயமே சாயையாய்த் தோற்ற மாகும்
இதயமே சூனியமாய்த் தோற்ற மாகும்
இதயமே யெல்லாமாய்த் தோற்ற மாகும்
இதயமே யல்லவுமாய்த் தோற்ற மாகும்
இதயமே யிருந்தபடி யிருப்ப தாமே. (106)

இப்படியே பிரஸ்தானத் திரய மெல்லாம்
என்றுமே முறையிட்டுக் கொண் டிருக்கும்
அப்படியே சோதித்துப் பார்க்குங் காலை
அதிலேது மையமிலா திருப்ப தாலும்
சொற்படிநா மனுபவித்துக் கொள்வ தாலும்
சுருதிகுரு சுவானுபவ மூன்றைக் கொண்டும்
எப்படியும் நம்முடைய வனுப வத்தை
இதிலிருந்து வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும். (17)

இதிலிருந்தே சாந்தோக்ய உபநி ஷத்தின்
இருதயமாந் தத்தோமசி வாக்கி யத்தை
மதிபண்ணித் தமிழிலே ஈஸ்வ ரன்தான்
மகிழ்ந்துமே விட்டுவிடா லக்க ணையோ
டதுநீதா னியதுதா னென்றுஞ் சொல்லி
அனைத்துமே நீயாக விருக்கின் றுயென்
றுதயமா மதர்வணத்தில் தெளிந்து மிக்க
உறுதியுடனிருப்பதற்கே யுரைத்தார் நேரே. (108)

ஆதலா லொருபொருளு முண்மை யில்லை
ஆயும்போ தெல்லாம்பொய்த் தோற்ற மேயாம்

பேதமின்றித் தேவர்களை உபாசித் தாலும்
பெருமையொடு கன்மங்கள் செய்திட்டாலும்
ஓதொணுக் கற்பசா தனைசெய் தாலும்
ஒருக்காலு மிம்மாயை ஒழிவ தில்லை
சோதியாம் பரசிவ ஐக்யந் தன்னில்
தோய்ந்துதான் நம்முள்ளந் தெளிவதாமே. ()

வேறு.

அருமையாம் விசாரத் தாலும் ஆப்தவாக் கியத்தி னாலும்
ஒருமையா யிருக்கும் பிரமம் உள்ளத்தி லுதிப்ப தாகும்
தரணியில் கோடா கோடி சாதனை விளையாட் டாலும்
மருவிய மாயை தானே மாறுவ தென்று மில்லை. (110)

உரிமையாய் விலக்கக் கூட்ட உதித்தொடுங் குதலில் லாத
பரவிய மனது வாக்கால் பகுத்துரைக்கவு மொண்ணுத
அருமையா மாதி யந்தம் அல்லாத வகண்ட மான
பிரமமே யெல்லா ருள்ளம் பிறிதற மிளிர்வதாமே. (111)

வேறு.

தானே திரிந்து தானய் விரிந்து
தானே துணிந்திவ் வுலகே
தானென் றழுந்தித் தானே தெரிந்து
தானே தெளிந்து தனையே
தானய் மகிழ்ந்து தானு யடைந்து
தானய் நிகழ்ந்த பொழுதே
தானு யொடுங்கித் தானய் முடிந்து
தானகை வோய்ந்த ததுவே. (112)

அறிவானந்த ஐக்கியானுபவ

சிந்தனு விளக்கம்

முற்றிற்று.

# ஞானிகளின் பெருமை.

பிரமகீதை சேனோபநிடதம்.

---

இந்தப் பரமாம் பொருளிறைவ
னருளா லியாவன் பெருமவன்று
னந்தப் பரம னேயென்ற
னறிவிற் றிகழ்வ தவன் பெருமை
சிந்தித் திடவொண் ணாதென்றுற்
செய்யப் படுமத் தேவர்களாற்
சந்தப் படுமா லாலரனாற்
சாற்றுந் தன்மை சாராதால். (18)

தங்க ளாக்கையிற் சகலயாக்
கையினிலுந் தத்துவ மதுதானே
யெங்கு மொன்றெனக் காண்பவர்
யாவரிங் கிறந்திடார் பிறவாராற்
பங்குபட் டறிந் தவனறி
யாதவன் பந்தன்முத் தர்களென்றே
யிங்கொ ருத்தனே நிகழ்பவன்
சேதன னிவைகன வியல்பொக்கும். (20)

தத்துவ ஞானி காணினுஞ் சகத்தைக்
கண்டிலன் றத்வமே கண்டான்
வத்துவே யாக அல்லவே யாக
மற்றொரு பொருளிலை யானு
லித்தில்வே றொன்றை யெங்ஙனங் காண்பா
னியாதொரு படிசகத் தாகத்
தொத்தர வில்லாத் தோற்றமெப் படியோ
வப்படி நிகழ்வது பரந்தான். (23)

எப்படித் தோற்ற மப்படி யாகி
யிலங்குவ துண்மையே யோகிக்
கப்படி யுண்மை யாகவே தெளிவுற்
றறிவதே யான்மவே தனந்தான்
செப்புநா மத்தா லுண்மையா லெல்லாந்
திகழ்வுமா தேவனே யாகி
லிப்படி யறிந்த ஞானிகைக் கொள்வா
னெத்தையன் றெனவெத்தை விடுவான். (24)

பேதமு மபேதந் தானும் பேதாபே தமும்வே றல்ல
வோதிலப் பரத்துக் கென்று முள்ளது பிரமந்தானே
தீதாக நன்றே யாகச் சிவனலா தில்லை ஞானி
யேதாகு மென்று கொள்வா னேதாகா தென்று நீப்பான். ()

பரமாத் துவித ஞானியே பரதே வதைதா னவனேயித்
திரமா முத்தி யானிங்குச் செப்பும் பொருள்செய்வினையாலு
முரமார் ததீசி கௌதமனு லுண்டாஞ் சாப வுரையாலுங்
கரமா மனிதர் நெஞ்சுதனிற் காதல் செய்யா ரொருகாலும்.

தொல்லைநல் வினையாற் சுருதிநன் மிருதி
சொன்னவா றுணிந்தவத் தூயோ
ரொல்லையிற் பரமாத் துவிதவே தனத்தை
யுள்ளவா றுணரவே யுணர்வர்
நல்லவிப் பரமாத் துவிதஞா னியைநா
ராயண னுருத் திரனு
மெல்லையி லெல்லாத் தேவரும் பூசித்
தேத்தவும் படுமிவ னென்றும். (58)

ஈசனு ஞானி யிருந்துள விடத்தே
யிருப்பது முத்திதா னந்தந்

தேசிக னேவல் செய்பவன் காலென்
சென்னியி லிருப்பது மன்னி
மாசிலாப் பரம ஞானியா முனிக்கு
மகேசனு மொப்பலன் மதிக்கி
லாசிலா வரியு மொப்பல னனு
மொப்பல னேவரொப் பாரே. (59)

ஒப்பறு பரமாத் துவிதஞா னத்தை
யுணர்ந்துள பரமயோ கிக்குக்
கைப்பொரு ளாவி காயமுங் கொடுப்பான்
காதலா லவைகொடுத் திடவே
யிப்பவ மறுக்கு ஞானம்வந் துதித்தற்
கேதுவா மதுவிது வொழிய
வுற்பவந் துடைக்கு முணர்வுபெற் றுய்தற்
கிலதிதி லையுறீ ரொன்றாம். (60)

பிரகதாரணிய உபநிஷத்.

அத்துவி தந்தா னும விகற்பம தடைந்த போதே
புத்தியி லிளைப்பும் போகும் போகுமிப் பிறப்பு நேரா
வெத்திகழ் வானும் பேத மின்மையா லிறையே யென்னுந்
தத்துவ வித்தே யென்றன் றலையினால் வணங்கத் தக்கான்.

ஒழிவிலாப் பரம யோகிய ரனுபவ
முள்ளவா றுரைத்திட யானோர்
வழிபெறே னெடுமான் மகேசன் மாமுனிவர்
வானவ ருரைத்திட மாட்டார்
விழிமிகுஞ் சிவனால் விஞ்சையாஞ் சிவையால்
விளம்பவும் படாதது விளம்பு
மொழியெலாம் வந்து மோனபா வத்தே
முடியுமன் னிலமதே முடிவு. (21)

சர்வசாஸ்திரார்த்த சங்கிரகம்.

யாதொரு படியிற் றோற்ற மென்றியம் பியது முன்னே
வாதனை யதனைப் பற்றி யல்லது மற்றொன் றில்லை
போதமே யுள்ள தென்றும் பூரண ஞானை யாலே
போதமில் வேலை போலு மொழிவற நிறைந்த யோகி. (12)

அப்படி யிருந்த யோகி யனுபவத் தன்மை தானு
மெப்படி யென்று காணு னீசன்மா ஞானுங் காணும்
செப்பிட வறியா வேதா கமங்களுஞ் சிவனார் மேனி
யெப்படி யென்னின் மற்றப் படியிலே யிருந்ததென்னும். (13)

தேசிகன் றிருவுள்ள முண்டாகவச் சிவன் றிகழ்ந்திடுகின்றான்
ஈசனிங்கருள் செய்யவந் திருக்கின்ற விடமிவன் திருமேனி
மாசதொன்றிவ னளவிலே செயிலெரி வாய்நர கினிற்பூத
நாசமெவ்வள வவ்வளவுஞ்செல நண்ணுநன்னெறி நண்ணான், (17)

அருவெனு மமலன்றா னருளில னெனி னுஞ்சார்
குருபர னருளுண்டே யெனிலொரு குறையுண்டோ
திருவடி தரவந்தார் திருவுள மிலரென்றா
லொருவரு மிலர்கண்டீ ருறுதுயர் களைகின்றார். (18)

உருவது தனில்வேறா யுளதல வதுநேரே
பெறவருள் பெரியோனே பெருகிய குருவாவா
னெறியுட னுளநாவா னிலைபெற வழிபாடே
செறிபவ னருளாலே சிவகதி யடைவானல். (19)

இந்த விடும்பை யுடம்புறு மேதுந்
தந்தை யெனப்புகழ் கின்றிலர் தக்கோ
ரந்த மிலாத வகண்டமு நம்முட்
டந்தவர் தந்தை யெனச்சமை வுற்றார். (20)

உண்டுபோற் றோன்று முலகெலா முண்மை
யன்றென வுணர்த்தி யெப்பொருளும்
கண்டசான் றதனைக் காட்சிய தறவே
கண்டிடக் கரியெனக் காட்டும்
பண்டைவே தாந்த வாக்கியஞ் சொன்ன
படியிலே பரமனோ டொன்றாய்
விண்டிடா வண்ண முணர்த்துவான் றன்னை
வியன்குரு வென்றிடும் வேதம். (21)

காட்சியை யெல்லாங் கண்ணதாய்க் கரைத்துக்
கண்ணொழிந் தொருபொரு ளில்லா
மாட்சியை யளிக்க வல்லவன் குருவா
மாரிபோன் மாறுவேண் டாதே
மீட்சியில் பதத்தைக் கருணையா லளிக்கும்
வித்தகக் குரவனே யெவருந்
தாழ்ச்சிசெய் தேத்தற் குரியதத் துவமாஞ்
சங்கர னென்றிடத் தகுவான். (22)

வருபிறப் பறவே வேண்டினுன் மறையீ
றென்னுமம் புயத்தினை மலர்த்தற்
கிரவியாய் நெஞ்சிற் கிசைந்தநற் குருவை
யாதொரு வழியினு லிறைஞ்சி
யருள்சுரந் திடுவோர்க் காவதே செய்வா
னருமறை முடிவெலா மறையுங்
பொருளோரே ராக வுமக்கெனக் கீசன்
புகன்றவப் படியிலே புகன்றேன். (23)

எல்லா மறிவா னுயில்லா தில்லானுகி யெல்லாந்தான்
வல்லா னுகித் தீங்கொன்று மருவானுகி வடிவருளே
யல்லா திலனு மிறையுண்மை யன்றிச் சொல்லா னப்பொருளிற்
சொல்லா தில்லையுங் கட்குச் சொன்னே னெல்லாஞ் சுருக்காக. (24)

போதவடி வாயகண்ட பூரணனுஞ் சிவனுக்கு
யாதுமுளங் கைக்கனியா மிவனருளின் படியொழிய
வேதமுடி யிற்பொருடாம் வேண்டியவா விளம்பியிடும்
பாதகர்போ யேறவொண்ணுப் பாழ்ங்கிணற்றில் வீழ்வர்களால் ()

ஆதிவே தாந்தப் பொருளேயத் துவித
மாம்படிக் ககிலநா யகனுஞ்
சோதிபா தப்போ திரண்டையுந் தொட்டுச்
சூழுகே னென்றயன் சொல்லிக்
காதலாற் பிறவிக் கவுடத முக்கட்
கடவுளைக் கருத்தில்வைத் தவன்றன்
பாதமே பணிந்து பரவியிப் பரிசே
பத்தியாற் பரவச னானான். (26)

## பகவற்கீதை.

2-வது அத்தியாயம்.

யாதொரு பொருளை யெல்லா வுயிர்களு மிருள்போற் காணு
வோதரு ஞானியத்தை யுளங்கையிற் கனிபோற் காணும்
யாதொரு பொருளை யெல்லா வுயிர்களு மென்றுங் காணுங்
காதலின் ஞானி யத்தைக் கண்ணினுற் றெரியக் காணான். (57)

## ஈஸ்வர கீதை.

11-வது அத்தியாயம்.

அடங்கு மனனுய்ப் பயனென்றி லாசைப் படாதா னளவற்ற
விடங்கொள் வினைகள் செய்தாலும் வீடே யெய்து மாதலினு
னுடம்பு காணு நல்யோகி யுண்டாம் வினையா லொருகாலு
மிடும்மையடையா னசைப்பா டில்லானெனையே யடைந்திடுமால்.

## கைவல்ய நவநீதம்.

### தத்துவவிளக்கம்.

"காண்பவெல்லாஞ் சொற்பனம் போலுமென்றே
துணிந்தவன் ஞானியாவான்" (38)

### சந்தேகந் தெளிதற்படலம்.

இந்தநிச்சய முத்தரு ளனுபவ
மிருப்பதெப் படியென்றால்
சிந்தை யற்றபூ மண்டல விராசனுஞ்
சிசுவும்போற் சுகமாவர்
பந்தமுத் திகள் மறந்துபோ முண்டென்று
பலர்சொல்லி னகையாவர்
அந்தரத்தையுண் டுமிழ்ந்ததோர் கொசுகெனு
மவர்களை நகையாரோ (88)

பொய்யை மெய்யென்ற மூடர்புண் ணியரென்று
புராணங்கூப் பிடுமானால்
மெய்யை மெய்யென்ற ஞானிக்குக் குற்றங்கள்
விதித்தசாத் திரமுண்டோ
பொய்ய தேதெனில் நாமரூ பங்களாம்
பூதமா கியமாயை
மெய்ய தேதெனிற் சச்சிதா னந்தமாய்
வியாபிக்கு மான்மாவே. (93)

## ரிபு கீதை.

### 14-வது அத்தியாயம்.

அகமலது தற்பதமாம் பொருளுமில்லை
யகமலது துவம்பதமாம் பொருளுமில்லை
யகமலதிங் கசிபதமாம் பொருளுமில்லை
யகமலதிங் ககண்டமெனும் பொருளுமில்லை

யகமலது சத்துமிலை யசத்துமில்லை
யகமலது சித்துமிலை சடமுமில்லை
யகமலதிங் கொருபொருளு மென்றுமில்லை
யகம்பிரம மென்றனிச மநுசந்திப்பாய். (30)

15-வது அத்தியாயம்.

எனக்கயலாய்த் தற்பதமாம் பொருளுமில்லை
யெனக்கயலாய்த் துவம்பதமாம் பொருளுமில்லை
யெனக்கயலா யசிபதமாம் பொருளுமில்லை
யெனக்கயலா யகண்டமதாம் பொருளுமில்லை
யெனக்கயலாய் வாச்சியமாம் பொருளுமில்லை
யெனக்கயலா யிலட்சியமாம் பொருளுமில்லை
யெனக்கயலா யெவையுமிலை யெல்லாநானென்
றித்திறமா முறுதியினாற் சித்தம்வெல்வாய். (42)

19-வது அத்தியாயம்.

அன்னியமே தோன்றாத வகண்டா கார
வறிவுதனை யடைந்தவனே முத்த னான
னின்னவித மகண்டபர ஞான முற்றோ
னிவ்வுலகி லெவ்விடத்து மரியனாவ
னுன்னவொணாப் பலகோடி சீவருக்கு
ளேரமான ஞானமுளோ ரொருவன்றானே
யன்னவனைத் தரிசித்த மாத்திரத்தா
லறமேலா யகமெல்லா மழியு மன்றே. (10)

திடஞானி தெரிசனமே தீர்த்த மாடல்
திடஞானி தெரிசனமே தேவ பூசை
திடஞானி தெரிசனமே செப தபங்கள்
திடஞானி தெரிசனமே செயு மறங்கள்
திடஞானி தெரிசனமே சிவத்தைக் காணல்
திடஞானி தெரிசனமே சிவத்தின் சேவை

திடஞானி தெரிசனமே மேவு தற்குத்
 திரிவிதமா முலகத்து மரிதா மியார்க்கும். (11)

வரமான ஞானிக்கு மகிழ்வி னோடே
 வளமான போசனமே யளிப்ப தாலுந்
திரமான ஞானிக்குத் தேவை யான
 திரவியமே சிரத்தையொடு கொடுப்ப தாலும்
பரமான ஞானிக்குப் பத்தி யோடே
 பலவிதமாம் பணிவிடையே செய்வதாலு
மரிதான மோட்சசுக மெளிதே யாக
 வடைந்திடலா மனுவுமிதி லையமில்லை. (12)

ஞானியுடை யருச்சனையே செய்வ தாலே
 ஞானபல மடைந்ததனாற் சீவன் முத்தி
யானபர மானந்த மடைய லாகு
 மதன்பின்பு பரமான விதேகமுத்தி
தானுமதா லடைந்திடலா மாத லாலே
 தளர்வுதரும் பவபீதி யனைத்துந் தள்ளி
யானியிலா முத்திநிலை யடைய வேண்டி
 லறிஞனுடை யருச்சனையே செய்யவேண்டும்.

வேறு.

நேசமாய்ப்பர நிச்சயமேவிய நிருவிகற்பக ஞானமடைந்ததா
னாசமேவிய விப்பலபேதமா நாமரூப மனைத்துமறந்துடன்
பாசமின்றியசிற்பரரூபமாய்ப்பர்தம்யாவும்விடுத்திடலாமெனை
லாசிலாநந்தத் தாண்டவமாடுநம் மாண்டவன்பரி பூரணரூபமே.()

## சீவன்முத்தன் இலக்கணம்.

8-வது அத்தியாயம்.

எனக்கயலாய்த் தூலமுதற் றேக மில்லை
 யெனக்கயலாய் நனவுமுத லவத்தை யில்லை

யெனக்கயலாய் விசுவன்முத லாரு மில்லை
யெனக்கயலாய்ச் சமட்டிவியட் டிகளு மில்லை
யெனக்கயலா யாந்தரமாஞ் சகத்து மில்லை
யெனக்கயலாய் வாகியமாஞ் சகத்து மில்லை
யெனக்கயலா யெவையுமிலை பிரம மேநா
னென்றுரமா யிருந்திடுவோன் சீவன் முத்தன். ()

எனக்கயலாய்த் தீர்த்தமிலை தான மில்லை
யெனக்கயலாய்த் தலங்களிலை தெய்வ மில்லை
யெனக்கயலாய்த் தெய்வத்தின் சேவை யில்லை
யெனக்கயலாய்த் தருமமிலை பாவ மில்லை
யெனக்கயலாய்ச் சனனமிலை பந்த மில்லை
யெனக்கலாய் ஞானமிலை மோட்ச மில்லை
யெனக்கயலா யெவையுமிலை பிரம மேநா
னென்றுரமா யிருந்திடுவோன் சீவன்முத்தன்.(9)

எனக்கயலாய் வேதமிலை நூலு மில்லை
யெனக்கயலாய் விதியுமிலை நிடேத மில்லை
யெனக்கயலாய்க் குருவுமிலை சீட னில்லை
யெனக்கயலா யுபதேச வாக்கு மில்லை
யெனக்கயலாய்ப் பரமுணரும் போத மில்லை
யெனக்கயலாய்க் காலமிலை தேச மில்லை
யெனக்கயலா யென்றுமொரு பொருளு மில்லை
யான்பிரம மென்றுணர்வோன் சீவன் முத்தன். (10)

எனக்கயலாய்ப் பூதமிலை புவனமில்லை
யெனக்கயலாய்ப் பௌதிகமா மெவையு மில்லை
யெனக்கயலாய்ச் சருவமிலை கிஞ்சி லில்லை
யெனக்கயலா யொருமையிலை யிருமை யில்லை
யெனக்கயலாய்த் தூரமிலை யண்மை யில்லை
யெனக்கயலா யுயர்வுமிலை தாழ்வு மில்லை

யெனக்கயலாய்ப் புகழ்வுமிலை யிகழ்வு மில்லை
யான்பிரம னென்றுணர்வோன் சீவன்முத்தன்.

எனக்கயலாய்ச் சாதியிலை நீதி யில்லை
யெனக்கயலாய்க்கோத்திரமுங் குலமுமில்லை
யெனக்கயலாய்க் கருமமிலை பயனுமில்லை
யெனக்கயலாய்க் காரியகா ரணமு மில்லை
யெனக்கயலாய் வித்தையிலை யவித்தை யில்லை
யெனக்கயலாய்த் தியானமிலை சமாதி யில்லை
யெனக்கயலாய் நாதமிலை சத்த மில்லை
யான்பிரம மென்றுணர்வோன் சீவன் முத்தன்.

எனக்கயலாய்ச் செபமுமிலை தவமு மில்லை
எனக்கயலாய் மந்திரதந் திரமு மில்லை
யெனக்கயலா யோமமிலை சாந்தி யில்லை
யெனக்கயலா யிரவுமிலை பகலு மிலலை
யெனக்கயலாய் விதியுமிலை யரியு மில்லை
யெனக்கயலாய் யரனுமில்லை யினனு மில்லை
யெனக்கயலாய்த் தேவதைக ளாரு மில்லை
யான்பிரம மென்றுணர்வோன் சீவன் முத்தன்.

## ஞானவாசிட்டம்.

### ஞானவிஸ்மகன் கதை.

மிகவருகா மாதிகளாம் விகாரமடைந்தும்
விண்போன் மிகநொய் தாஞே
ரகமெனலின் றிச்செயல்கள் செய்தாலுந்
தவிர்ந்தாலு மழுத்த மற்ருேர்
சகநெறிகள் செய்திடினு மன்னியர்போற்
கண்டுருளிர் தன்மை சான்ருேர்

திகழ்மனமு நினைவுமிருந் துஞ்சிறிது
மில்லாதோர் சீவன் முத்தர். (37)

தூக்கசுகங் களிலழுந்தி மிதவாத
புந்திநிலை சுபாவ மானோர்
புக்கசுழுத் தியினனைவாய் நனவின்றி
வாதனைதீர் போத முற்றோர்
மிக்கசம மாயுலகால் வெருளாம
லுலகினையும் வெருட்டா மேலோர்
சிக்கறநன் னினைவிருந்து நினைவிலா
தவரிவரே சீவன் முத்தர். (38)

வீதகவ்வியன் கதை.

விச்சையெனும் விழிநன்றாய் விளங்கப்பட்டு
வெம்மாய விடயத்தின் மீட்சி யெய்தி
இச்சையுறு பற்றென்ப தெங்கு மில்லா
வியன்மனத்தோ டிருப்பவரே யிறவா முத்தர்
நிச்சயமா மெப்போது மெவற்றின் பானு
நிற்பவனு யனைத்துடனு நிற்போ னாகி
எச்செயலுஞ் செய்வோனுஞ் சீவன் முத்த
னியற்றியவிம் மனத்தின்ற னியல்பு கேளாய். (10)

தொழிலினினை விற்பொருளில் விண்ணின் மேல்கீழ்
சூழ்திசையிற் புறப்போகத் தொகுதி தம்மி
லழிதருமைம் பொறிநடையி லுள்ளி னிற்கு
மின்னுயிரிற் சென்னியிலா நரத்தி னாவி
லழியும்விழி களின்மூக்கிற் புருவந் தன்னி
லகங்கரத்திற் சீவனினுள் ளாகா சத்தில்
விழிநனவிற் சொப்பனத்திற் சுழுத்தி தன்னில்
வெள்ளைமுத னிறமைந்தின் வியன்வண் ணத்தில்.

சலனத்திற் றிரத்திலடி நடுவி லீற்றிற்
சமீபத்திற் றூரத்திற் சரீராங் கத்திற்
பலபண்டந் தன்னிற்சே தனத்திற் சத்த
பரிசாதி களின்மகிமை பயிலின் பத்தி
னுலவுவரத் திற்போக்கிற் காலப் பண்பி
லொருசிறிதும் பற்றும லுணர்வி லாறி
நிலவியகாண் பனசிறிது பயின்று மெங்கு
நிராசையாய்ப் பரசுகத்தி னிற்கு நெஞ்சே. (12)

உபசாந்திப் பிரகரணம்.

அபாவமே பற்றலபா வம்பாவித்தல்
ஆய்ந்துண்மைப் பொருண் காண்டன்மன மாய்வென்பர்
சுபாவமா மனைத்தையுமுள் ளகற்றிச்சிதச்
சுதைபோலு மிவ்விதய நடக்குமென்னிற்
றவாதமெதாழி லுற்றாலு மந்தச்சித்தந்
தன்வடிவி லாதமெதனச் சாற்றுங் கண்டாய்
குவான்மறுசன் மந்தருவா தனைத்துன் னுதோர்
குலாலவட்டம்போற்றிரிவர் குறைவின் முத்தர்.()
வறுத்தவிதை யொப்பாகி யின்பமன்றி
மறுசநந மற்றவா தனைசேர்ந் துள்ளோ
ரொறுத்தவிடர் தீர்சீவன் முத்தராகு
முண்மையுரு மடைந்தமன முடையோ ரன்னோர்
நிறுத்துணர்ஞா னக்கரையுற் றவருமன்னோர்
நெஞ்சமிலா தவரன்னோர் நிமிலமாகப்
பொறுத்தவிட னீங்கிலா காசரூபம்
பொருந்தினரன் னோரென்று புகழ்வரன்றே. (28

முற்றிற்று

ஓம் தத் சத்.

# ஆகாய வாதம்.

பூத பௌதிகங்களாலாகிய உலகப் பொருளனைத்தினுள்ளும் சந்தென்பது உண்டென்பது உண்மையேயாம். சந்தென்றாலும், இன்மை யென்றாலும், சூனியமென்றாலும், அபாவ மென்றாலும், ஆகாயமென்றாலும், விசும்பென்றாலும், ககனமென்றாலும், வெளி யென்றாலும் ஒரு பொருள் குறித்த பல சொல்லாக விளங்குகின் றது. சந்து இல்லை யென்று தோன்றினும், உண்டென்பதே துணிபுடைத்து. எப்படியெனின் சோதித்துக் காட்டுவாம்.

சுவர்கட்டிய காலத்து அதினிடத்துள்ள ஈரத்தை உஷ்ண வாயு வெளிப்படுத்துவதென்பது திண்ணம். சந்தென்பது ஆங்கு இன்றேல் ஈரம் வெளிப்படுத்துவதெங்ஙனம்? ஒருவாற்றானும் இன்றேயாம்.

இருப்புப் பாத்திரமுதலியவற்றை அனலிலிட்டு எரிக்குங் கால் கீழ்ப்பக்கத்தேபடுங் கனலின்சூடு மேல்பக்கத்தே தோன்றக் கண்டுள்ளோம்.

இதனாலே அப் பாத்திரத்தின் கணுள்ள சந்தினாலல்லவோ அச்சூடு எழுந்ததாகத் தெரிகின்றோம். இல்லாவிட்டால் முடியா தன்றோ. இனி மிகுந்த இடத்திலுள்ள ஓர் பாரப்பஞ்சினை யந்தி ரத்தி னழுத்த அப்பஞ்சே சிறிதிடத்தில் அடங்குவதைப் பார்க்கி றோம். வாளாவைத்தால் மிகுந்த சந்தும், யந்திரத்திலழுத்தினால் சிறிது சந்தும் இருப்பதாகத் தோன்றும்.

இப்படியே ஒவ்வொரு பொருளும் நெருக்கமில்லாம லிருந் தால் மிகுந்த சந்தும், நெருங்கினால் குறைந்தசந்தும் இருப்பதாகக் காண்கிறோம். சந்தில்லாத எப்பொருளும் என்றும் இல்லை யென் பதே துணிபென்க.

மலை, கருங்கற் பாறையேனும் அதிலிருந்து புனல் பெருகக் காண்கிறோம். சந்து எவ்விடத்திலுள்ளதோ அவ்விடத்தில் பொருளின் ஆற்றல் இன்றென்க.

## உதாரணம்.

சல்லடையின்கண் சந்தும் பொருளும் உண்டென்பது திண் ணம். சந்துஉள்ளவிடத்து மூங்கிலின்று, மூங்கிலில் சந்துஉள்ளது [illegible]றதி.

இங்ஙனமே செங்கல் ஒன்றை ஆராயுங்கால் சந்தும் பொருளு முள்ளன. சந்து உள்ள விடத்துச் செங்கல் என்பது ஒன்றுஇன்று. அச்சந்தொழிந்த கல்லினிடத்து சந்து உளதா என்று ஆராயின் ஆங்குஞ் சந்து நிகழ்கின்றது.

இவ்வாறு தொடர்ந்து சென்று ஆயுமிடத்து அணுநிகழ்கின் றது. அவ் வணுவினை ஆயின் சந்து நிகழ்கின்றது. சந்தொழிய நின்ற அணுவினை ஆயுங்கால் பரமாணு நிகழ்கின்றது. அதனையும் ஆயுங்கால் சந்து நிகழ்கின்றது.

இங்ஙனம் எம்மட்டும் செல்லினும் எவ்விதம் ஆராயினும் சந் தில்லாத எத்துணை அணுவினையும் காண்டலரிது. சந்துள்ள இடத்துப் பொருளின்று; பொருளுள்ள விடத்துச் சந்துளது. சந் தில்லாப் பொருள் நிகழ்ந்தாலல்லவோ உண்மைப் பொருள் சித் திக்கும். ஆனதால் சந்தில்லாப் பொருள் கிடைப்பதே இல்லை.

சிலர் பரமாணுவாகிய அதிநுட்ப அணுவில் சந்து இன்றென் றும், இரண்டுபரமாணு சேர்ந்தவிடத்துமாத்திரம் இடையே சந்து உண்டென்றும் கருதுவர். ஒன்றுமில்லாத வெற்ற வெளியின்கண் ஓர் ஆணினை நிறுத்திவைப்பின், வைத்தற்கு முன்னர் ஆங்கிருந்து இன்மையாகிய அவ்வெளி எங்கேனும் ஓடிப்போயதோ? அத்தா ணினை எடுத்துவிடின் பெயர்த்தும் அவ்வின்மை அங்கு எய்தி யதோ? இரண்டுமின்று.

ஆங்கிருந்த அவ் வெளியாகிய இன்மை யாது பொருந்தினும் யாதுகழியினும் வருதலோ போதலோ இன்றாம்.

ஆணெனல் பலப்பல பரமாணு நிறைந்துளதாகலின் எங்கும் நிரம்பிய இன்மை பரமாணுவின்கண் மாத்திரம் இலதென்பது ஒருவாற்றானும் பொருந்தாதென்க. ஆகலின் இவ்வுலகு முற்றும் இன்மை இன்மையே.

பெரும்பான்மை யிலதேனும் சிறு பான்மையேனும் உண்மை யென்று வாதிப்பதற் கொவ்வா தென்க.

ஆதலின் எப்பொழுதும் ஆகாயம் அதாவது இன்மை உள தென்பது பெற்றாம்.

சத்தாய்த் தோற்றுதல் அதிட்டானத்தை நோக்கியென்க. அதிட்டானம் என்பது வேறு.

---

திருக்குறள்.—துறவு—அதிகாரம்.

இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து. (4)